Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 23 திங்கட்கிழமை (09.12.2013) பக்கங்கள் 20 ஓசை - 070




## உள்ளக நிர்வாக கட்டமைப்பில் மாற்றம் செய்கிறது ஈ.பி.டி.பி.

### ஊடக அறிக்கையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாறிவரும் அரசியல் சூழலையும், நீண்ட காலமாக திட்டமிடப்பட்ட கட்சியின் செயற்பாடுகளின் மறுசீரமைப்புக்கான தேவையையும் கருத்தில் கொண்டு கட்சியின் அலுவலகங்களை ஒழுங்கு செய்வதையும், உள்ளக நிர்வாகக் கட்டமைப்பில் தேவையான மாற்றங்களையும் செய்யத் தீர்மானித்துள்ளதாக ஈ.பி.டி.பி. விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நெடுந்தீவிலிருந்து எமது அலுவலகம் நீக்கப்பட்டதையும், யாழ். குடாநாடு தழுவிய ரீதியில் உள்ள எமது அலுவலகங்களில் சிலவற்றை எதிர்காலத்தில் அகற்றுவதற்கு திட்ட மிட்டிருப்பதையும் திடீர் நடவடிக்கையாகவோ, அவசரப்பட்ட நடவடிக்கையாகவோ நாம் முன்னெடுக்கவில்லை.

நீண்டகாலமாகவே எமது அலுவலகங்களை ஒழுங்கமைப்பது மற்றும் கட்சியின் கட்டமைப்பை மீள் ஒழுங்கு செய்வது என்ற எமது ஆய்வுகளும், ஆதரவாளர்களின் அபிப்பிராயங்களும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இடையில் தேர்தல்கள் வந்ததாலும், குறிப்பிட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டிருந்த அரசியல் செயற்பாடுகளை பூர்த்தி செய்யவேண்டிய தேவை இருந்ததாலும் எமது சீரமைப்புச் செயற்பாடுகள் காலதாமதமடைந்திருந்தன.

தற்போது மாறியிருக்கும் அரசியல் சூழலையும், நீண்ட காலமாக திட்டமிடப்பட்ட கட்சியின் செயற்பாடுகளின் மறுசீரமைப்புக்கான தேவையையும் கவனத்தில் கொண்டு அலுவலகங்களை ஒழுங்கு செய்வதையும், உள்ளக நிர்வாகக் கட்டமைப்பில் தேவையான மாற்றங்களைச் செய்வதையும் கட்சி செயற்படுத்தும். அதன் ஒரு நடவடிக்கையாகவே நெடுந்தீவு அலுவலகம் மூடப்பட்டதும், தீவகத்திலுள்ள சில அலுவலகங்களை அகற்றிக் கொள்வதற்கான திட்டமுமாகும்.

எமது கட்சியின் திட்டங்களும், நடவடிக்கைகளும், எமது மக்களுக்கான நலன்களில் இருந்தும், எமது அரசியல் கொள்கைளுக்கு வலுச்சேர்க்கும் விதமாகவுமே இருக்கும். எமது நிலைப்பாட்டை ஆதரவாளர்கள் புரிந்து கொண்டுள்ளனர் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நம்புகின்றது.

கட்சியின் திட்டங்களுக்கும், செயற்பாடுகளுக்கும்

(19) பக்கம் பார்க்க...

### குடும்பஸ்தர் அடித்துக் கொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்ணகி நகர் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் இப்பகுதியிலுள்ள மரக்காலை ஒன்றிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் இதில் 14 ஆம் வாய்க்கால் சின்னச்சாமி சந்திரன் (வயது-50) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இச்சம்பவத்தை அடுத்து கிளிநொச்சிப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் 5 பேரைக் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (கே)

## சுயவிருப்பின் பேரில் கிளி.இல் கருத்தடை

### வடமாகாண சுகாதார அமைச்சு அறிவிப்பு

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்டத்தில் தாய்மாரின் சுய விருப்பின் பேரிலேயே கருத்தடை மேற்கொள்ளப்பட்டதாக வடமாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில், கடந்த நவம்பர் முதலாம் திகதியன்று வேரவில், கிராஞ்சி மற்றும் வலைப்பாடு ஆகிய கிராமங்களில் முறையான சுகாதார வழிகாட்டலின் பின்னர், தாய்மார் சுய விருப்பத்தின் பேரில் கருத்தடையை ஏற்றுக் கொண்டாலும், அவர்கள் நிதானமாகச் சிந்தித்து முடிவெடுப்பதற்குரிய கால அவகாசம் வழங்கப்படாமையே இந்த விடயத்தில் குற்ற உணர்வு மற்றும் சமூக நெருக்கீடு ஏற்படக் காரணமாகியுள்ளது எனவும் வடமாகாண சுகாதார அமைச்சு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மேலும், போருக்குப் பின்னரான இந்தக் காலப்பகுதியில்,

(19) பக்கம் பார்க்க...

### கிணற்றில் வீழ்ந்து குழந்தை பலி

(அச்சுவேலி)

பெண் குழந்தையொன்று கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சிவானந்தன் தர்மினி (வயது-3) என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாய் சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, இந்தக் குழந்தை கிணற்றடிக்குச் சென்று தவறி கிணற்றினுள் விழுந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிணற்றிலிருந்து சடலத்தை அச்சுவேலி பொலிஸார் மீட்டுள்ளனர். (85)

### ஜெனிவா மாநாட்டிற்கு முன்னர் மனித உரிமை சட்டத்தில் திருத்தம்



ஜெனிவாவில் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறும் மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டுக்கு முன்னதாக, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்தில் திருத்தங்களை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அதன் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மாஹாநாம ஹேவா தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில், மேற்கொள்ளப்பட உள்ள புதிய திருத்தங்கள் ஜனாதிபதிக்கும், நீதியமைச்சருக்கும் வழங்கப்பட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டு நிறைவேற்றப்

(19) பக்கம் பார்க்க...

### இலங்கையின் தற்போதைய நிலை; விசனம் கொள்கிறார் சந்திரிகா



இலங்கையின் தற்போதைய நிலைமையைப் பார்க்கும்போது, அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக சில அரசியல்வாதிகள் மற்ற இனத்தைச் சேர்ந்த மக்களைக் கொல்லவும், தாக்கவும் எரிக்கவும் தயாராக இருக்கிறார்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மறைந்த நெல்சன் மண்டேலாவுக்கு உலகெங்கிலுமிருந்து அரச தலைவர்கள், முன்னாள் அரச தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச பிரமுகர்களும் தங்களின் புகழஞ்சலிகளை செலுத்தி வருகின்றனர்.

அவரிடமிருந்து அரச தலைவர்கள். என்ன வகையான பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும் என்று சந்திரிகா தனது எண்ணங்களை பி.சி.சி.யிடம் பகிர்ந்துகொண்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு அறிவித்தார்.

சொந்த நலன்களை பற்றி மட்டும் சிந்திக்காத ஒரு அரசியல்வாதியாக மன்னித்தல், மீள்

(19) பக்கம் பார்க்க...


08



கனவு

## ஐ.நா. மனித உரிமை கூட்டத்தில் இலங்கையை சிக்க வைக்க முயற்சி

### எச்சரிக்கிறார் அமைச்சர் திஸ்ஸ



(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுக்கூட்டத்தில் இலங்கை சிக்கிக்கொள்ளும் அபாயம் காணப்படுவதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மனித உரிமை ஆணைக் குழுவில் அமெரிக்காம் பிரித்தானியாவும் இணைந்து இலங்கைக்கு எதிரான யோசனை ஒன்றை கொண்டு வரும் அடையாளங்கள் தென்பட ஆரம்பித்துள்ளன.

இதனைத் தடுக்க வேண்டுமாயின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முடிந்தளவில் செயற்படு

(19) பக்கம் பார்க்க...

17



திருவெம்பாவை

### தொடரும் கடல் கொந்தளிப்பு; முல்லையில் மீன்பிடி பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல் தொடர்ச்சியாக கொந் தளிப்பாகக் காணப்படுவதால் மீன் பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது மீன்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த ஒரு

(19) பக்கம் பார்க்க...

### புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய எட்டு நாடுகளின் விபரங்கள் வெளியிடத் தயாராகும் அரசு

புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கிய 8 நாடுகள் தொடர்பான தகவல்களை சாட்சியங்களுடன் வெளியிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்கள், இலத்திரனியல் உதிரிப்பாகங்கள் உள்ளிட்ட பொருட்களின் தயாரிப்பு இலக்கம் மற்றும் நாடுகளின் அடையாளம் இருந்துள்ளன.

அமெரிக்க அரசு வைத்துள்ள எம்.16 தாக்குதல் துப்பாக்கி, கடற்புலிகளின் படகுகளில் பயன்படுத்தப்பட்ட ரேதியோன் ராடார் கட்டமைப்பு, பிரித்தானிய தயாரிப்பான கடல் ஸ்கூட்டர் உட்பட பல பொருட்கள் புலிகளிடம் இருந்த நிலையில் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் பிரதேசத்

(19) பக்கம் பார்க்க...

# வல்வெட்டித்துறை நகரசபை வரவு - செலவுத்திட்டம் தோற்கடிக்க ஆளும் கூட்டமைப்பினர் முயற்சி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகர சபையின் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்கான முயற்சியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வல்வெட்டித்துறை நகர ச்பையின் தவிசாளர் ந.அனந்தராஜின் செயற்பாடுகள் பிடிக்கவில்லையென உறுப்பினர்கள் மயூரன், பிரதீபன், கனகேந்திரராஜா, சிவநாயகம் ஆகியோர் நகரசபையின் உப தலைவர் சதீசை தலைவராக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் வரவு - செலவு முன்மொழிவுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் புறக்கணிப்புச் செய்திருந்தனர். மேலும 2012 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க உள்ளூர் அதிகார ச்பைகள் விசேட ஏற்பாடுகளின் கீழ் 17 ஆம் பிரிவு 169 இல் இந்த வரவு - செலவு தோற்கடிப்பின் தலைவர் தாமாக பதவி விலகவேண்டும் நியதி இருக்கிறது. அதற்கமைய 2014 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்டத்தைத் தோற்கடிக்கும் நோக்குடன் உபதலைவர் சதீஸின் வீட்டில் இன்று கூட்டம் நடைபெறவுள்ளது எனவும், இது குறித்து தமிழரசுக் கட்சிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் வல்வெட்டித்துறை நகரசபையின் ஆளும் கூட்டமைப் பினர் .தெரிவிக்கின்றனர். (116)

# வெள்ளநீர் தேங்கி நிற்பதனால் தொற்று நோய் ஏற்பட வாய்ப்பு

## கவலை வெளியிடும் பயணிகள்

(கொடிகாமம்)

கொடிகாமம் நவீன பஸ்தரிப்பிடத்திற்கு அருகில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் தொற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கொடிகாமம் நகரப்பகுதியில் உள்ள பஸ்தரிப்பிடத்திற்கு அருகாமையில் வெள்ளநீர் தேங்கி நிற்கிறது. இதேவேளை பஸ்தரிப்பிடத்திற்கு அருகாமையில் மலசல கூடம் இருப்பதனால் அந்தப் பகுதியில் இருந்து வரும் வெள்ளநீரும் பள்ளமான பகுதியில் சேர்ந்து நிற்கிறது.

பருத்தித்துறை வீதியில் உள்ள பஸ்தரிப்பிடத்தில் இருந்து பெருமளவான அரச, தனியார் பேருந்துகள் சேவையை மேற்கொள கின்றன. பெருமளவான பயணிகள் பயன்படுத்தும் இந்தப் பகுதியில வெள்ள நீர் தேங்கி நிற்பதனால் தொற்றுநோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக பிரயாணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து பஸ் தரிப்பிடப் பகுதியில் வெள்ள நீர் தேங்கி நிற்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (130)

# ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு ஊடகவியல் அறிமுகம் தொடர்பாக யாழ். ஊடக அமையத்தினால் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை இன்று காலை 8 மணிக்கு இராசாவின் தோட்ட வீதியிலுள்ள யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெறவுள்ளது.

அமையத்தின் தலைவர் த. வினோயித் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அறிமுக வுரையை மூத்த ஊடகவியலாளர் இ.தயாபரனும், விருந்தினர் உரையை கொழும்பு பிரித்தானிய கலாசார உத்தியோகத்தர் டவுன் சுனியும நிகழ்த்தவுள்ளனர். விரிவுரையினை வண.பிதா ரூபன் மரியாம் பிள்ளை நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வமுள்ளவர்களை இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (இ)

## செயலமர்வு

மாற்றுத் திறனாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்களுக்கான செயலமர்வு இன்று கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு இச்செயலமர்வு கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன தலைமையில் இடம் பெறும்.

சமூக சேவைகள் அமைச்சின் சிபிதுர் திட்டத்தின் கீழ் இச்செயலமர்வு இடம்பெறவுள்ளது. (இ)

# நவசக்தி முன்பள்ளியின் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும்

கைதடி நவபுரம் நவசக்தி முன்பள்ளியின் வருடாந்த கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நவபுரம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நவசக்தி முன்பள்ளி முகாமைத்துவ குழுத் தலைவி திருமதி. அன்பழகன் மதனா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்ப பிள்ளை அபிவிருத்தி பிரிவுப் பணிப்பாளர் ஜெயா தம்பையா கலந்துகொள்ளவுள்ளார்.

விசேட விருந்தினராக பண்டாரவளை கல்வி வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வேதநாயகம் தபேந்திரன், கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலையின் முதல்வர் நடராசா ஜெயரூபன், தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் திருமதி வரதீஸ்வரி சத்தியேஸ்வரன், ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட செயலக புனர்வாழ்வு அலுவலர் முருகேசு கயோதரன், இதம் உள சமூக நிறுவனத்தின் இணைப்பாளர் எஸ். மயூரன், கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் தலைவர் இ.கந்தசாமி, சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கல்வி உத்தியோகத்தர் தி.விஜயதீபன், சாவகச்சேரி பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி சுபத்திராதேவி தனபாலசிங்கம், கைதடி நவசன சமூக நிலையத் தலைவர் மு.சிவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (90)

# மின்னொளி பெறும் இரு கிராமங்கள்

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம் ஆகிய கிராமங்களில் கடந்த வருடம் முதல் மீளக்குடியமர்ந்தவர்கள் மின்விநியோகத்தை பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேலைகள் முடிவுற்ற பகுதிகள் இன்றுமுதல் சாவகச்சேரி மின்சார சபையிடம் ஒப்படைக்கப்படுகிறது. இதனடிப்படையில் மின் இணைப்பைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் சாவகச்சேரி மின்சார சபையினருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2485 திகதி 07-12-2013

ஆங்கில எழுத்து: M

வெற்றி எண்கள்: 17 18 26 61

போனஸ் இல: 38

ஜக்பொட் பரிசு ரூ.16,443,425/-வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 209879 | 20/- | 4,197,580/- |
| 2 இல | 15039 | 100/- | 1,503,900/- |
| 3 இல | 306 | 1,000/- | 306,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8434 | 40/- | 337,360/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 611 | 1,000/- | 611,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 16 | 10,000/- | 160,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 16,443,425/- | - |
| 1 இல + போனஸ் இல | 10004 | 100/- | 1,000,400/- |
| 2 இல + போனஸ் இல | 469 | 500/- | 234,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 380 | 200/- | 76,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 13 | 1,500/- | 19,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 245156 | | 9,846,240/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2013 டிசம்பர் 11 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 17,016,275/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 தொ.பே: 2333546/7

(C/3212)



## மக்கள் வங்கியின்

சிறிய மற்றும் நடுத்தர வியாபார நிலையம்

(Small and Medium Enterprise Centre)

### திறப்பு விழா

தொழில் முயற்சியாளர்களுக்கு பிரத்தியேகமான நிதிசார் துணைச் சேவைகளினை வழங்கும் நிலையம்

மக்கள் வங்கியின் பிரதிப்பொது முகாமையாளர்

திரு. T.A.ஆரியபாலா

(கூட்டுறவு அபிவிருத்தி வங்கியியல்)

அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

காலம் : 2013.12.09 (திங்கட்கிழமை)

நேரம்: காலை 10.05 மணி

இடம்: பிராந்திய தலைமைக் காரியாலயம் மக்கள் வங்கி, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமையாளர்

SME நிலையம்

மக்கள் வங்கி, கன்னாதிட்டி வீதி.

யாழ்ப்பாணம்.

(C/3217)



'இந்துநெறி காப்போம்
இந்துவாக வாழ்வோம்'

"ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி"

இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை 1008 முறை எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப்பித்து எமதுசமயத்தினையும் சமயவிழுமியங்களையும் எம்மக்களையும் காத்திட

அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்துமந்திரம் முதலீடு செய்வீர்களாக!

# புலமையில் சித்திபெறும் மாணவரின் முயற்சி

# ஏனைய பரீட்சைகளிலும் தொடரவேண்டும்

## யாழ்.மத்திய கல்லூரி அதிபர்



(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் பாடசாலை அனுமதியில் நல்ல கல்விச் சூழலில் உள்வாங்கப்படுகின்றார்கள். க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைப்பெறுபேற்றின் உயர்வுவரை இந்த நல்ல கல்விச்சூழல் தொடர வேண்டும். புலமைப்பரிசில் சித்தியடையும் மாணவர்களின் உற்சாகம் தொடர்ந்தும் ஏனைய பரீட்சைகள் வரை தொடரப்படவேண்டும் என யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டு புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவர் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற போது நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய சவால்களுக்கு முகக் கொடுக்கக்கூடிய மாணவ சமூதாயத்தினை உருவாக்குவதற்கு பெற்றோர்கள் பாடசாலைச்சமுகத்திற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். பாடசாலையில் இருக்கின்ற உச்ச வளங்களினைப் பயன்படுத்தி மாணவர்கள் தங்களினை வளபடுத்திக்கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களினைப் பொறுத்தவரையில் தொழில்நுட்பக்கல்வியானது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. இலங்கையில் அறிமுகப்படுத்தப்படுகின்ற தொழிலநுட்பப்பாடப்பிரிவானது முக்கியத்துவம் வாய்ந்த கற்கை நெறியாக விளங்குகின்றது. எமது பாடசாலையினைப் பொறுத்த வரையில் தொழிலநுட்பக்கலவியானது தேவைப்பாடான ஒன்றாக விளங்குகின்றது. பெரும்பாலான மாணவர்கள் அக்கற்கை நெறியினை தொடர்வதற்கு தயாராக உள்ளார்கள்.

எமது கல்லூரியில் இக்கற்கை நெறி இல்லாத காரணத்தினால் பல மாணவர்களை நாம் இழக்க வேண்டி வருகின்றது. எமது பாடசாலையினை விட்டுச்செல் கின்றார்கள். தொழில்நுட்ப கூடத்தினையும் தொழில் நுட்பக் கற்கையினையும் ஆரம்பிப்பதற்கு ஆவன செய்யுமாறு கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார்.

# புதிய செயற்றிட்டம்

மேத்தா பவுண்டேசன் நிறுவனத்தினர் கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கின்ற மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை அவயவங்களைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்த மாத நடுப்பகுதியில் இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு தமது அவயவங்களை இழந்தவர்கள், செயற்கை அவயவங்கள் தேவையுடையவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பயன்பெற முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான தேவை உள்ளவர்களை உடனடியாக தமது பிரிவு பிரதேச செயலகத்தில் உள்ள சமூகசேவை உத்தி யோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (10)


# ஸ்ரீ மனோன்மணி அம்பாள் மண்டபம் திறப்பு

(யாழ்.நிருபர்)

ஈழத்துச்சிதம்பரம் என்று போற்றப்படும் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவில் மாணிக்கவாசக சுவாமிகள் மடாலயத்துடன் இணைந்த புதிய ஸ்ரீ மனோன்மணி அம்பாள் மண்டபம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபைத் தலைவர் லயன் ஈ.எஸ்.பீ.நாகரத்தினம் தலைமையில் நடைபெற்ற கட்டடத் திறப்பு விழாவில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் 'தானங்களில் சிறந்தது அன்னதானம்' என்னும் பொருளிலும் வலம்புரி ஆசிரியர் ந.விஜசுந்தரம் 'ஈழத்து மடாலயங்கள்' எனும் பொருளிலும் சிறப்புரை வழங்கினர்.

காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மாணவர்களின் மிருதங்க இசை, யாழ்ரன் கல்லூரி மாணவர்களின் குழு இசை, காரை சிறுவர்களின் கரகம், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர் களின் 'பத்மாகரன் மோகினி' நாட்டிய நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (10)



நல்லூர் வடக்கு அருள்மிகு சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கஜமுக சூர சம்கார நிகழ்வைக் காணலாம்.

# தங்களுக்கு வெளியே வரலாறு இல்லை என்போர்...




'மகாவம்சத்தில் எவ்வளவு வரலாற்றுத் திரிப்புகள் இருக்கு? திட்டமிட்டுச் சிங்களவர்கள் அதை எழுதியிருக்கிறார்கள்'என்று சொல்லிக் கொண்டேயிருப்பார் சி.க. சிற்றம்பலம்.

சி.க.சிற்றம்பலம் யாரென்று தெரிந்தவர்கள் போக தெரியாதவர்கள் அறியுங்கள்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறை பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்.

தமிழரசுக்கட்சி இவரைக் கணக்கில் எடுத்ததோ இல்லையோ அந்தக் கட்சியின் முக்கிய தூண்களில் ஒருவர்.

புலிகளின் காலத்தில் அமிர்தலிங்கத்தைப் போற்றிப் புகழ்ந்து எழுதப்போய் அன்ரன் பாலசிங்கத்திடம் செம்மையாக வாங்கிக் கட்டியவர்.

தன்னுடைய குடும்பக் கோவிலில் வேலைசெய்கிற (அப்பழுத்தான் ஆலயத்துக்குப் பூஜை செய்யும் ஐயரை அவர் சொல்வார்) அர்ச்சகரை இருத்தி எழுப்புகிறவர்.

தமிழரசுக்கட்சியின் பழைய பஞ்சாங்கத்தையே தமிழரின் வரலாறாக எழுதத் துடிப்பவர். (இதற்கென்றே கொழும்பில் இருந்து வரும் ஒரு பெரும் பத்திரிகை தன்னை ஒப்புக்கொடுத்து, ஒரு செய்தியாளரையும் அதற்காக விட்டுக்கொடுத்திருக்கிறது).

இப்படியான சிற்றம்பலம்தான் மகாவம்சத்தைப் பற்றி குற்றம்சாட்டிப் பேசிக் கொண்டிருக்கிறார்.

மகாவம்சத்தில் தவறுகளும் உள்நோக்கங்களும் இருக்கலாம்.

இதைப்பற்றி பலரும் சொல்லியும் எழுதியும் வருகிறார்கள்.

ஒடுக்குமுறையைச் செய்கிற சிங்கள ஆட்சியாளருக்கு அது துணைபோய்க் கொண்டிருப்பதாகவும் பெரும் குற்றச்சாட்டுகள் உண்டு.

ஆனால், சிற்றம்பலம் செய்கிற மகாபாவத்தை விட மகாவம்சம் ஒன்றும் பெரிய குற்றப்பத்திரிகை இல்லை.

தமிழரசுக் கட்சியைத் தவிர, இந்த மண்ணில், இந்தச் சமூகத்தில் வேறு ஒரு புல்லும் முளைக்கவில்லை என்று அவர் அழிச்சாட்டியம் பண்ணுகிறார்.

அவரைப்பொறுத்தவரை இந்த உலகத்தில்புலியும் இல்லை,பூனையும் இல்லை.

சிற்றம்பலம் மட்டுமல்ல, வரலாற்றுத்துறையில் செயற்படுகின்ற ஆய்வாளர்கள், அறிஞர்கள் எல்லோரும்தான் பெரிய பிழைகளை விடுகிறார்கள்.

தமிழரசுக்கட்சி, பிறகு தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழீழவிடுதலைப்புலிகள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆகியவை மட்டும்தான் இந்த மண்ணில் இருந்த, இருக்கின்ற, செயற்பட்ட, செயற்படுகின்ற அமைப்புகள் என்பதே இவர்களின் வரலாற்றுப் பதிவு.

ஏனையவற்றைப் பற்றி இவர்கள் கணக்கில் எடுப்பதே இல்லை.

ஆனால், மக்களின் வாழ்க்கையிலும் கடந்த கால–சமகால நிகழ்ச்சிகளிலும் இந்தக் கட்சிகள், இயக்கங்களுக்கு அப்பால் வேறு இயக்கங்களும் கட்சிகளும் மக்களுக்காகச் செயற்பட்டிருக்கின்றன.

அவற்றுக்கும் வரலாற்றில் சிறப்பான இடங்கள் உண்டு.

இன்னும் உற்று நோக்கினால், அந்தக் கட்சிகளே மக்களின் அடிப்படையான தேவைகளோடும் வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்திருந்திருக்கின்றன.

ஆனால், தமிழ்ச் சூழல் என்ற பெரும்பேய் இந்தக் கட்சிகளையும் இதில் உள்ளவர்களையும் திட்டமிட்டே மறைக்கிறது.

இதனால் வரலாற்றில் இந்தக் கட்சிகளின் இடம் காணாமற் போகப்பண்ணப்படுகிறது.

இந்தக் காலத்தில் ஆட்கள் மட்டும் காணாமற் போகவில்லை.

வரலாற்றின் நிகழ்ச்சிகளும் கூடத்தான் காணாமற் போகின்றன.

இதை இந்தத் தமிழ் வரலாற்றாசிரியர்கள் கண்டு கொள்வதேயில்லை.

அவர்களைப் பொறுத்தவரையில் வரலாறு என்பது கண்ணுக்கெட்டாத கடந்த காலத்தைப்பற்றியது மட்டும்தான்.

இவர்களில் ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் அரைத்த மாவை அரைக்கும் வாய்பாட்டுக்காரர்தான்.

அரைத்த மாவை அரைப்பது ஒரு போதும் வரலாறாகாது.

வரலாறு என்பது கடந்த காலத்தைக் கண்டு பிடிப்பது. அதில் மீள்பயணம் செய்வது. நிகழ்காலத்தில் நின்று கொண்டு எதிர்காலத்தின் மீது ஒளி பாய்ச்சுவது.

அது மட்டுமல்ல, நிகழ்காலத்தில் நின்று கொண்டே நிகழ்காலத்தின் மீது ஒளிபாய்ச்சுவதும்தான்.

நிகழ்காலத்தின் மீது முறையான ஒளியைப் பாய்ச்சினால்தான் எதிர்காலப்பயணம் சிறப்பாக அமையும்.

இதைத் தமிழ் வரலாற்றாய்வாளர்களும் வரலாற்றாசிரியர்களும் விளங்கிக்கொள்வதில்லை.

அப்படி விளங்கிக் கொண்டவர்களும் நமக்கேன் வீண் வம்பு என்ற கணக்கில் வாயைப்பொத்தி, கண்ணை இறுக மூடி, ஐம்புலன்களையும் அடக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

சிலர் சாய்ந்தால் சாய்கிற பக்கமாகவும் இருக்கிறார்கள்.

இதெல்லாம்ஒரு வகையான அரசியல்தான் என்கிறார் விடயமறிந்த ஒரு மகான்.

என்ன செய்வது?பாம்பு தின்கிற ஊரில் நடு முறி நமக்கு என்ற கதைதான் எல்லாம்.

இப்போது வரலாற்றாசிரியர்களும் அரசியல்வாதிகளைப்போல ஆகி விட்டார்கள்.

நிகழ்கால வரலாற்றில் நிகழும் இருட்டடிப்புகளையும் திரிப்புகளையும் கண்டும் காணாமல் இருப்பவர்கள், தங்களின் கண்முன்னே நிகழும் வரலாற்று மறைப்புக்கு முழு அளவில் துணைபோகிறார்கள்.

இப்படித்தான் எல்லா வரலாறும் இருக்குமா? என்றால்எல்லாமே மாயைதானா...

உழைப்பு இல்லாமல் எதையும் பெற முடியாது என்பது இயற்கை வகுத்த சட்டமாகும். - நெப்போலியன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## உள்ளத்தில் ஒழிந்திருப்பது என்ன?

தமிழ் மக்களாகிய நமது உள்ள உட்கிடக்கை என்ன? எதை நாம் தீர்வு என்று ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறோம்? நமக்கு என்னதான் வேண்டும்? இதையெல்லாம் வெளிப்படையாக விவாதித்து சாதக பாதகங்களை அலசி நமக்குள் ஒரு முடிவை அடைந்திருக்கிறோமா? அல்லது அப்படி ஒரு முடிவெடுக்கத் தயாராகவேனும் இருக்கிறோமா?

நமது விருப்பம், சமஷ்டி? சுயநிர்ணயம்? வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி? தமிழீழம்? என்னவாகவும் இருக்கட்டும். அதனதன் நடைமுறைச் சாத்தியம் என்னவாக இருக்கிறது என்று நமக்குள் உரையாடி விளக்கவோ விளங்கிக்கொள்ளவோ முயலமாட்டோமா?

சர்வதேச அழுத்தம், ஜெனீவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் பிரேரணை, போர்க்குற்ற விசாரணை கொண்டு வருதல், இலங்கையில் ஆட்சியோ தலைவரோ மாற்றம்.... இவையெல்லாம் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கிறோம்?

இவற்றிலேயே தமிழ்த்தரப்பு முழுமூச்சாக இருப்பதால், சிங்கள வெகுமக்கள் இதனை ஒட்டுமொத்தமான நாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளாகவே பார்க்கிறார்கள். இவ்வாறான சந்தேகமும் சவால்களுமான சூழலை உருவாக்கியபடி நல்லிணக்கத்திற்கான பாதையில் எப்படிப் போய்ச் சேருவது?

உடனேயே, வெற்றியடைந்தவர்கள்தானே நல்லிணக்கத்திற்கான முன்கையை எடுக்கவேண்டும், அவர்களுக்குத்தானே அந்த முதற்பொறுப்பு இருக்கிறது என்று சொல்லிவிட்டு "இராணுவமே வடக்கை விட்டு வெளியேறு" கோஷம் போடப் போய்விடாதீர்கள்.

ஐயன்மீர், அவர்கள் நாம் விரும்பியபடி நல்லிணக்க சமிக்ஞையை காட்டவில்லை என்றே வைத்துக்கொள்வோம். நல்லிணக்கத்தை உண்மையிலேயே நாம் நம்புபவர்களாயின் நமது கடமை என்ன? வலி தீரவேண்டிய முதன்மை அவசியம் யாருக்கு? நல்லிணக்கத்தை நாம் மனதார விரும்புகிறோம் என்று காட்டுவதாகவா நமது தலைவர்கள் எனப்படுவோரின் நடவடிக்கைகளும் பேச்சுக்களும் அமைந்திருக்கின்றன?

பேச்செதுவும் சரிவராது என்று சவால்களை விட்டபடி, சர்வதேசம் இங்கே எதைச் சாதிக்கப் போகிறது என்று மக்களுக்கு எதிர்பார்ப்பையும் நம்பிக்கைகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறோம்? நம் எல்லோர் மனங்களும் ஏதோ ஒரு உரலை இடித்துக் கொண்டிருப்பது எந்த அவலை நினைத்து?

இந்தத் தீவில் சிங்கள மக்களை முழுதாக மறுத்தொதுக்கி விட்டு நமக்கென்றொரு ஆட்சியதிகாரத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோமா? அது நடைபெறக் கூடியதுதானா? அவர்களையும் பொருட்படுத்தி நமக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள நாம் செய்ய வேண்டியது என்ன? பேச வேண்டியது என்ன?

நம்மைத் தூண்டி விடுகிறவர்கள், அனுதாபம் காட்டி உணர்ச்சியேற்றுபவர்கள், நாம் மட்டுமே அரக்கர்கள் நடுவே இருப்பதாகச் சொல்லி நாம் போரிட்டழிய ஞாயம் வழங்குபவர்கள் எல்லோரும் உண்மையாக நமக்காக உள்ளவர்களா? அல்லது நமக்கு வாய்த்திருப்பதுதான் பேசவோ சேர்ந்து வாழவோ முடியாத கொடூர எதிர்த்தரப்பு. அதுதான் உண்மையா?

நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் கஷ்டப்படக் கஷ்டப்பட வேறு யாரும் உதவிக்கு வரக்கூடும் என்று பெருங்குரலெடுத்துப் புலம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. நாம்தான் பேசியாக வேண்டும். தீர்வு கண்டாக வேண்டும்.

எங்களை நாங்களே அழித்துக் கொள்ளும் விதமாக, வாழ்வைச் சிதைத்துக் கொள்ளும் விதமாக எதிர்ப்பை வைத்துக் கொள்வது புத்தியில்லை. பழைய கனவுகளும் மாறாத 'இலட்சியப் பார்வை'யும், பெறச் சாத்தியமான தீர்வின்பால் நம்மை நகர விடுவதாயில்லை. உலகில் நமக்கு மட்டுமே அநீதிகள் நடந்திருப்பதாக அரற்றி, மக்களுக்கு வதை வாழ்வை அளித்துக் கொண்டிருப்பதாகவே முடிகிறது.

- ஆசிரியர்

# வடக்கு மாகாண தேர்தலுக்குப் பின் கிழக்கை கைகழுவியது கூட்டமைப்பு

## அரியநேத்திரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களிடம் கிழக்கு மாகாணம் தொடர்பான அக்கறையும் அரசியல் செயற்பாடுகளும் குறைந்து வருவதாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான பா.அரியநேத்திரன் குற்றஞ்சாட்டுகின்றார். வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர், வடக்கு மாகாண சபைதான் தமிழ் மக்களுக்கான தீர்வு என்ற தவறான மாயை உருவாக்கப்படுவதாகவும், தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இந்தப் போக்கு துரதிஷ்டவசமானது என்றும் அவர் கூறியுள்ளார்

வடக்கு மாகாண சபைத் தேர்தல் உட்பட அனைத்து தேர்தல்களிலும் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் சுய நிர்ணய உரிமையுடனான தீர்வைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்து தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றிருந்தது என்றார் அரியநேத்திரன்.

குறிப்பாக, வடக்கு முதலமைச்சர் தன்னைச் சந்திக்கும் இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் வட மாகாணத்தையே முதன்மைப் படுத்தி பேசுகின்றார்.

சில சந்தர்ப்பங்களில் தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கூட வடக்கை முதன்மைப் படுத்தியே இத்தகைய சந்திப்புக்களில் பேசியிருப்பதையும் எம்மால் அவதானிக்க முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

கிழக்கு மாகாணத்திலும் இராணுவத்தினால் காணி அபகரிப்புகள், திட்டமிட்ட குடியேற்றங்கள் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்திற்கான அனுமதி மறுப்பு போன்ற பிரச்சினைகள் இல்லாமல் இல்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கூறினார். எனவே வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் பிரதிநிதிகளையும் கிழக்கு மாகாணத்திற்கும் அழைத்துவருவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமை கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

குறிப்பாக சம்பூர் பிரதேச மக்களின் முழுமையான மீள் குடியேற்றத்திற்கு இந்திய உதவியுடனான அனல் மின்நிலையமும் ஒரு தடையாக இருப்பதால், இந்திய அதிகாரிகள் இலங்கை வரும்போது அவர்களை கிழக்கு மாகாணத்திற்கும் அழைத்துவந்து மக்களின் அவல நிலையை காட்டவேண்டும் என்றும் அரியநேத்திரன் தெரிவித்தார். இதேவேளை, கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை தமிழோசையிடம் மறுத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன், இணைந்த வடக்கு, கிழக்குடன் தீர்வு என்ற நிலைப்பாட்டையே சர்வதேச பிரதிநிதிகளிடம் வலியுறுத்திவருவதாகக் கூறினார்.

அதேவேளை வடக்கு மாகாண தேர்தலுக்குப் பின்னர், மாகாண சபை முதலமைச்சருக்கு முக்கியத்துவம் அளித்து சர்வதேச பிரதிநிதிகள் அவரை சந்தித்து வருவதாகவும் சம்பந்தன் தெரிவித்தார்.

# நிறைவுபெறாத கண்ணி அகற்றல் மீள்குடியமர்வில் நீடிக்கிறது தாமதம்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 524 குடும்பங்கள் இன்னும் மீள்குடியமர்த்தப்படாத நிலையில், தொடர்ந்தும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர் இத்தாவில், வேம்பொடுகேணி மற்றும் முகமாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தப் பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றாமையே மீள்குடியேற்றம் தாமதமடைந்துள்ளமைக்கு பிரதான காரணம் என மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்த மக்களை சொந்த இடங்களில் குடியேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 40.594 குடும்பங்கள் மீள்குடியேற்றப் பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

## பொதுநலவாய மாநாடு மூலம் இலங்கைக்கு நற்பெயர்

நடந்து முடிந்த பொதுநலவாய மாநாட்டின் பின்னர் இலங்கைக்கு நற்பெயர் கிட்டியுள்ளதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். கொழும்பில் மிகவும் சிறப்பாக இடம்பெற்ற 23 ஆவது பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் பின்னர், இலங்கை சர்வதேசத்தின் முன்னால் சிறந்த நாடு என்ற பெருமையை பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பின்தங்கிய நாடாக முத்திரை குத்தப்பட்டிருந்த இலங்கை, பொதுநலவாய நாடுகள் மாநாட்டை நடத்தியதன் பின்னர், சிறந்த நாடு என்று உலக நாடுகளால் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## வடக்கின் பிந்திய களநிலைவரம் ஐ.நா.வுக்கு செல்கிறது அறிக்கை

வடக்கின் ஆகப்பிந்திய களநிலைவரம் தொடர்பான விரிவான அறிக்கை ஒன்று ஐக்கிய நாடுகள் சபையிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த ஐ.நா. சபையின் பிரதிநிதிகள் மற்றும் அறிக்கை மாகாணங்கள் ஊடாகச் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட களநிலைவர அறிக்கையே ஐக்கியநாடுகள் சபையிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து இந்த அறிக்கையில் பல்வேறு தகவல்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை மையமாகக் கொண்டு இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

போரின் பின்னரும் வடக்கில் படையினரும் அரசாங்கமும் காணிகளை ஆக்கிரமித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மத வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்பட்டமை குறித்தும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யுத்தப் பாதிப்பின் கணக்கெடுப்பு யாழ்.மாவட்டத்தில் துரிதம்

(யாழ்ப்பாணம்)

யுத்தப்பாதிப்புக்கள் தொடர்பான விசேட கணக்கெடுப்பு யாழ்.குடாநாடு பூராகவும் மிகவும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுரீதியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி விசேட கணக்கெடுப்பை மேற்பார்வை செய்வதற்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் இந்தக் கணக்கெடுப்பு குறித்த முன்னேற்ற அறிக்கைகள் நாளாந்தம் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு வரு கிறது. யுத்தம் காரணமாக மரண மடைந்தவர்கள், காணாமற்போனவர்கள், காயமடைந்த வர்கள், சொத்துக்களை இழந்தவர்கள் போன்ற விபரங்கள் இந்தக் கணக்கெடுப்பின் போது சேகரிக்கப்பட்டு வருகிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் ஆற்றிய உரை

**இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் எந்தளவு வளர்ச்சி அடைகின்றதோ, அதே அளவிற்கு இனங்களுக்கிடையிலான சம உரிமைகளும் பிறக்க வாய்ப்புண்டு. ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரோ இன நல்லிணக்க உறவுகளுக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறார்கள். அது போலவே வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்து போகின்ற சில தலைவர்களும் தங்களை மீட்பர்கள் போல் காட்டிக்கொண்டு இன நல்லிணக்க உறவுகளை சீர்குலைக்கும் விதமாகவே நடந்து கொள்கிறார்கள். தமிழ் கட்சி தலைமைகள் தமது உள்நாட்டு அரசியலை மதிநுட்பத்தோடு முன்னெடுக்க முன்வர வேண்டும்.**



உங்கள் தேர்தல் வெற்றிகளை மட்டும் பெற்றுக்கொள்ள மக்கள் தொடர்ந்தும் அனுமதிக்க மாட்டார்கள்.

இது மக்களிடம் இருந்து உங்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் ஓர் எச்சரிக்கை சமிக்ஞையாக இருக்கட்டும்.

இதே வேளை இன்னொரு விடயத்தை நான் இங்கு குறிப்பிட்டு காட்ட விரும்புகின்றேன்.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் எந்தளவு வளர்ச்சி அடைகின்றதோ, அதே அளவிற்கு இனங்களுக்கிடையிலான சம உரிமைகளும் பிறக்க வாய்ப்புண்டு.

ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பினரோஇன நல்லிணக்க உறவுகளுக்கு எதிராகவே செற்பட்டு வருகிறார்கள்.

அது போலவே வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்து போகின்ற சில தலைவர்களும் தங்களை மீட்பர்கள் போல் காட்டிக்கொண்டு இன நல்லிணக்க உறவுகளை சீர்குலைக்கும் விதமாகவே நடந்து கொள்கிறார்கள்.

இன முரண்பாடுகளை தூண்டி விட்டு

# மக்களை மீண்டும் மீண்டும் இருண்ட யுகத்தினுள் தள்ளிக் கொண்டிருக்கும் சரித்திரத்தை மாற்றியமைக்க வாருங்கள்

**கௌரவ** சபாநாயகர் அவர்களே!...

எனது உரையை ஆரம்பிப்பதற்கு முன் இந்தச் சபைக்கு ஊடாக ஒரு செய்தியை மானுட உலகத்தின் கவனத்திற்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

தென்னாபிரிக்க மண்ணில் தோன்றிய நெல்சன் மண்டேலா என்ற மகத்தான மனிதச்சூரியன் இன்று மறைந்து விட்டது.

ஆபிரிக்க கண்டத்தில் உதித்தாலும் கண்டங்கள் தாண்டி உலகெங்கும் ஒளிவிட்ட அந்தச் சூரியனை இந்தச்சபையில் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

எவ்வாறு பக்குவமாக, தந்திரமாக உரிமைகளை பெற வேண்டும் என்பதற்கு நெல்சன் மண்டேலா அவர்கள் உலகத்திற்கே ஒரு உதாரணம்.

எதிர் நிலையில் உள்ளவர்களையும் தன்னோடு இணங்க வைத்து எதையும் சாதிக்க வல்ல மதிநுட்ப சிந்தனைக்கு நெல்சன் மண்டேலா அவர்களே ஓர் எடுத்துக்காட்டு.

தான் நேசித்த மக்களை அழிவுகளில்,.. அவலங்களில் இருந்து பாதுகாத்து அந்த மக்களை சுதந்திர பிரஜைகளாக வாழ வைத்த நெல்சன் மண்டேலா அவர்கள் சகலருக்கும் ஓர் அனுபவ பாடப்புத்தகம்.

உலகெங்கும் வாழுகின்ற ஒடுக்கப்பட்ட மக்களின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்த அந்த மகத்தான தலைவருக்கு,...

எமது மக்களின் சார்பாகவும், எமது அரசாங்கத்தின் சார்பாகவும்எனதுஅஞ்சலி மரியாதையை நான் செலுத்துகின்றேன்.

இலங்கைத்தீவின் வெளிவிவகார கொள்கையானது பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும்,... தடைகளுக்கு மத்தியிலும் சிறந்த முறையில் கையாளப்பட்டு வருகின்றது.

வல்லரசு நாடுகளின் அரசியல் போட்டிகளுக்கு மத்தியிலும், அரசியல் அழுத்தங்களுக்கு மத்தியிலும், அரசாங்கம் அனைத்துலக நாடுகளினதும் நேசக்கரங்களை பற்றிக்கொண்டிருப்பது ஒரு சரித்திர சாதனை என்றுதான் கூற வேண்டும்.

இதற்கு, அண்மையின் இங்கு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட பொதுநலவாய நாடுகளின் மாநாடு ஓர் சிறந்த உதாரணமாகும்.

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டை நடத்த விடாது சிலர் தடுப்போம் என்றார்கள்,

தடுப்பது போல் சிலர் நடித்தார்கள்,

ஆனாலும், அந்த மாநாட்டை தடுப்பது போல் நடித்தவர்கள் பொது நலவாய மாநாட்டிற்கு இங்கு வந்து போன உலக தலைவர்களை சந்திக்க வேண்டும் என்பதில் உறுதியாகவே இருந்தார்கள்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்கள் சூளுரைத்தது உண்மையாயின்,...

அந்த மாநாட்டில் கலந்து கொள்ள வந்த உலகத் தலைவர்களையும் சந்திக்க மறுத்து தமது எதிர்ப்பை காட்டியிருக்க வேண்டும்.

அல்லது, தாம் கலந்து கொள்ள விரும்பாத மாநாட்டில் உலகத்தலைவர்கள் கலந்து கொண்டது தவறு என்பதை உணர்த்தியிருக்க வேண்டும்.

பதிலாக, யாழ். நகரில் வைத்து பிரித்தானிய பிரதமர் கமரூன் அவர்களை சந்தித்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் கிசு கிசு மந்திரங்கள் பேசி அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

பிரித்தானிய பிரதமரோடு தாம் எதைப் பேசினோம் என்ற உண்மையான தகவலை தமக்கு வாக்களித்த மக்களுக்கு இன்று வரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தெளிவுபடுத்தியிருக்கவில்லை.

அரசாங்கத்தின் வெளியறவுக் கொள்கையை ஏற்று, அரசாங்கத்தின் அனுசரணையோடு நடந்த பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள வந்த பிரித்தானிய பிரதமரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் பிரித்தானியா சென்றே சந்தித்திருக்கலாம்.

உலக நாடுகளுக்கு உல்லாச பயணம் சென்று,.. ஆடம்பர விடுதிகளில் தங்கியிருந்து,... புலம்பெயர் மக்களின் சொத்தில் சுக போகம் அனுபவித்து,.. கம்பேக்கரும் (Hamburger), சீஸ் பேக்கரும், பீட்சாவும் உண்டு மகிழ்ந்து, உற்சாக பானம் அருந்தி கூத்தாடி, உலகத்தலைவர்களை சந்தித்தோம் என்று புலுடா விடுகின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமது வழமையான அரசியலை வெளிநாடு சென்று நடத்தியிருக்கலாம்.

பிரித்தானிய பிரதமரின் யாழ். விஜயத்தின் போது நடந்த மக்கள் ஆர்ப்பாட்டங்கள் கடந்த கால வரலாறுகளையே ஞாபகப்படுத்துகின்றன.

வளர்த கடா மார்பில் பாய்ந்தது போல் உங்களால் தூண்டி விடப்பட்டவர்களே உங்களால் ஏமாற்றப்பட்டவர்களாக, உங்களது தலைவர்களையே பலியெடுத்தார்கள்.

நடந்திருக்கவே கூடாத அந்த வடுக்கள் நிறைந்த வரலாறுகளையே மீண்டும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கி வருகிறது.

விழி நீர் சிந்திவீதியெங்கும் காணாமற் போனவர்களின் உறவுகள் காத்திருக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மட்டும் தமது தேர்தலுக்கான தமிழ்த் தேசிய உடைகளை கைவிட்டு கோட் சூட்டுடன் பிரித்தானிய பிரதமர் கமரூனை தனியாக சந்தித்திருந்தார்கள்.

இதை கண்டு கொதித்தெழுந்த மக்கள் சம்பந்தன் அவர்களது வாகனத்தை மறித்து நடத்திய போராட்டமும், கலகமும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை திண்டாட வைத்த காட்சிகளை உலகெங்கும் வாழும் எம் உறவுகள் பார்த்திருக்கிறார்கள்.

உசுப்பேற்றி விடப்பட்ட மக்கள் உசுப்பேற்றி விட்ட கட்சியின் தலைவரான சம்பந்தன் அவர்களுக்கு எதிராகவே உருக்கொண்டெழுந்தார்கள்.

சம்பந்தன் அவர்கள் அந்த நேரத்தில் பட்ட அவஸ்தைகளையும், பதட்டத்தையும், அச்சத்தையும் நினைக்கும் போது அவருக்காக நாமும் அனுதாபப்பட வேண்டியிருக்கிறது.

மக்களுக்கு நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் அந்தச் சம்பவம் அன்று நடந்திருக்காது....

நீங்கள் பிரித்தானிய பிரதமரை சந்தித்தது போல், தமது உறவுகளை இழந்த நிலையில் நடு வீதிகளில் அங்கே காத்திருந்த காணாமற் போனவர்களின் உறவினர்களையும் நீங்கள் கௌரவமாக நடத்தியிருந்தால் உங்களுக்கு இந்த அச்சுறுத்தல் நடந்திருக்காது.

அந்த மக்களையும் நீங்கள் கமரூனை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தால் நீங்கள் உசுப்பேற்றி விட்டவர்கள் உங்களுக்கு எதிராகவே திரும்பிய அந்தச் சம்பவம் நடந்திருக்காது.

பலரை பல காலம் ஏமாற்றலாம், சிலரை சில காலம் ஏமாற்றலாம்,

ஆனால் எல்லோரையும் எல்லாக் காலங்களிலும் ஏமாற்ற முடியாது.

மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது. மக்களுக்கு போலி வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அதில் அரசியல் நடத்த முற் படுவோர் எவராக இருப்பினும் அவர்களை நாம் அனுமதிக்க முடியாது.

அரசாங்கம் எவ்வாறு வெளிவிவகார கொள்கையில் சாணக்கியமாக நடந்து கொள்கிறதோ, அவ்வாறே தமிழ் கட்சி தலைமைகளும் தமது உள்நாட்டு அரசியலை மதிநுட்பத்தோடு முன்னெடுக்க முன்வர வேண்டும்.

2 ஆம் உலக யுத்தத்தில் அழிவு கண்ட ஜேர்மனியில் புதிதாக தோன்றிய அரசு தமது தரப்பு தவறுகளையும் ஏற்றுக்கொண்டு, யாருக்கு எதிராக யுத்தம் நடத்தினார்களோ அதே அமெரிக்காவோடு கை குலுக்கித்தான் இன்று உலகமே வியக்கும் வகையில் ஜேர்மானிய தேசத்தைக் கட்டி எழுப்பி இருக்கிறார்கள்.

அது போலவே தமிழ் கட்சித் தலைமைகளும் கனிந்து வந்த சந்தர்ப்பங்களை தாமே தவற விட்ட தவறுகளை ஏற்றுக்கொண்டு, அழிவுகளுக்கு தாமும் பொறுப்பு என்ற உண்மையை உணர்ந்து கொண்டு, அரசாங்கத்தின் உறவுகளை பயன்படுத்தி, இழந்து போன எமது மக்களின் உரிமைகளைப் பெற்று, அழிந்து போன எமது வாழ்விடங்களையும் தூக்கி நிறுத்துவதே ஆக்கபூர்வ அரசியலாகும்.

இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்வர வேண்டும் என நான் இந்தச் சபையின் ஊடாக பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன்.

ஆடத்தெரியாதவன் அரங்கு பிழை என்று கூறுவது போல், வடமாகாண சபையை நடத்துவதற்கு அடுத்தவர்கள் தடையாக இருப்பதாக போலி பிரசாரம் செய்து வருகிறார்கள்.

மாகாணசபை ஆட்சியும் அதிகாரங்களும் எமது கனவு மட்டுமல்ல. எமது மக்களின் கனவுகளும் அதுவே ஆகும்.

இதிலிருந்து தொடங்கியே நாம் எமது அரசியல் இலக்கை எட்ட முடியும் என நீண்ட காலமாகவே வலியுறுத்தி வருகின்றோம்.

ஆள்வது யாராக இருப்பினும், வாழ்வது எமது மக்களாக இருக்க வேண்டும்.

ஆகவேதான் நாம் போட்டி அரசியலை நடத்த விரும்பாமல் எமது மக்களுக்காக வடமாகாண சபையை சிறப்புற நடத்த எமது ஒத்துழைப்பை வழங்குவோம் என்று பகிரங்கமாகவே நேசக்கரம் நீட்டியிருந்தோம்.

**(18ஆம் பக்கம் பார்க்க)**

# ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான போக்கு ஏன்?

## விளக்கமளிக்கிறார் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

அமெரிக்காவிற்கு பயந்தே ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை சில நாடுகள் ஆதரித்துள்ளன என்று வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 2009 இல் நடந்த உள்நாட்டு போரில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்று இலங்கை இராணுவம் போர் குற்றம் புரிந்துள்ளது என்று குற்றஞ்சாட்டி, இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா கொண்டுவந்த இரு தீர்மானங்கள் வெற்றிபெற்றமை குறித்து வெளியுறவு அமைச்சு விளக்கமளிக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் சஜித் பிரேமதாசா எம்.பி கேட்டிருந்தார்.

இதற்கு வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் பதிலளிக்கையில் கூறியதாவது, கடந்த 2011 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டுவரப் போவதாக கனடா வெளியுறவு அமைச்சர் கூறினார்.

ஆனால் அதற்கு ஆதரவு இல்லாததால், அவர்கள் அதை செய்யவில்லை. ஆனால், இந்த தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்தது. அப்பொது நிலைமையே தலைகீழாக மாறியது. அமெரிக்கா 2012, 2013 ஆம் ஆண்டில் மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வந்தது. அந்த தீர்மானங்கள் வெற்றி பெற்றன. காரணம் அமெரிக்காவிற்கு பயந்தே இந்தத் தீர்மானத்தை சில நாடுகள் ஆதரித்துள்ளன.

அமெரிக்காவுடனான இருதரப்பு உறவில் விரிசல் ஏற்படும் என்ற காரணத்தாலேயே நாங்கள் அமெரிக்கா கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை ஆதரித்தோம். இல்லாவிடில் அவர்களின் ஆதரவை நாங்கள் இழக்கக்கூடும் என்று என்னிடம் அவர்கள் தனிப்பட்ட முறையில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்த ஜனாதிபதி தென்னாபிரிக்காவுக்கு?



(கொழும்பு)

தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவின் இறுதிச்சடங்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 5 ஆம் திகதி இரவு காலமான நெல்சன் மண்டேலாவின் இறுதி நிகழ்வு வரும் 15 ஆம் திகதி அவர் பிறந்து வளர்நத மலைப்பகுதி கிராமமான கியூணு என்ற இடத்தில் இடம்பெறவுள்ளது.


இந்த நிகழ்வில் பங்கேற்க வரலாறு காணாத வகையில் உலகத் தலைவர்கள் தென்னாபிரிக்காவுக்கு படையெடுக்கவுள்ளனர்.

அமெரிக்க அதிபர் ஒபாமா, முன்னாள் அதிபர்கள், புஷ், கிளின்டன், மற்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், சோனியாகாந்தி உள்ளிட்ட ஏராளமான தலைவர்கள் தென்னாபிரிக்கா செல்லத் தயாராகி வருகின்றனர்.

இந்தநிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசும் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், வெளிவிவகார அமைச்சர் பீரிசும், நாளை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை கென்யாவுக்கு அதிகார பூர்வ பயணத்தை மேற்கொள்ள ஏற்கனவே முடிவு செய்திருந்தனர்.

கென்யாவில் இருந்து திரும்பும் வழியில் தென்னாபிரிக்கா சென்று நெல்சன் மண்டேலா வுக்கு அஞ்சலி செலு[illegible] ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மன்மோகனின் வடக்கு விஜயம் கை விரிக்கிறது இந்திய தூதரகம்



(கொழும்பு)

இந்தியப் பிரதமர் மன்மாகன் சிங் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவிருப்பது குறித்து தமக்கு ஏதும் தெரியாது என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் கூறியுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வருமாறு இந்தியப் பிரதமருக்கு வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் விடுத்த அழைப்பு குறித்து எமக்கு அறிவிக்கப்படவில்லை.

உண்மையில் இந்த அழைப்புக் குறித்து நாம் நாளிதழ்களிலேயே படித்து அறிந்து கொண்டோம் என்று இந்தியத் தூதரக மத்திய பொது தகவல் அதிகாரியான கௌரவ் அலுவாலியா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் மூலமாகவா, அல்லது வெளிவிவகார அமைச்சின் ஊடாகவோ இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கலாம்.

இந்த அழைப்பு இந்தியத் தூதரகம் ஊடாக அனுப்பப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிரடி இடமாற்றம்

(கொழும்பு)

பிரதி பொலிஸ் மாஅதிபர்கள் 8 பேர் நாளை செவ்வாய்க்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளனர்.

ரொஹாண் டயஸ் யாழ் மாவட்டத்திற்கும், ஜயந்த விக்கிரமசிங்க வவுனியா மாவட்டத்திற்கும், ரீ.பி.சம்சுதீன் நுவரெலியா மாவட்டத்திற்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

மெக்சி புறக்டர் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபராகவும், காமினி மதுரட காலி மாவட்டத்திற்கும் யூ.கே.திசாநாயக்க கிளிநொச்சி மாவட்டத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்திற்கு பொறுப்பாக கடமையாற்றிய கீர்த்திசிறி கனேகம புத்தளம் மாவட்டத்திற்கான பிரதி பொலிஸ் மாஅதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



மூதூர் கொட்டியாரக்குடா கடலில் ஏற்பட்ட கடும் கடற்கொந்தளிப்பு காரணமாக கடல்நீர் குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்துள்ளது. கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட இந்த கடற்சீற்றம் காரணமாக மீனவர்களின் கடற்தொழில் உபகரணங்களும் சேதமடைந்தன.

# மேஜர் ஜெனரல் ஜெகத் டயசுக்கு வீசா மறுப்பு வெளிவர மறுக்கும் இரகசியங்கள்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் ஜெகத் டயசுக்கு அவுஸ்ரேலிய வீசா நிராகரிக்கப்பட்டமை குறித்து கருத்து வெளியிட கொழும்பிலுள்ள அவுஸ்ரேலியத் தூதரகம் மறுத்துள்ளது

சிட்னியில் அனைத்துலக செஞ்சிலுவைக் குழு ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் பங்கேற்பதற்கு, அவுஸ்ரேலியா செல்ல வீசா கோரியிருந்த மேஜர் ஜெனரல் ஜெகத் டயசின் விண்ணப்பம், அவுஸ்ரேலிய அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டது.

இதுதொடர்பாக, அவுஸ்ரேலியத் தூதரக பேச்சாளரிடம் விளக்கம் கோரியபோது, எந்தவொரு வீசா விவகாரம் தொடர்பாகவும், கருத்து வெளியிடுவதற்கு சட்டரீதியான தடை இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, அவுஸ்ரேலியாவின் இந்த முடிவு தனக்கு கடந்த வியாழக்கிழமை தெரியபடுத்தப்பட்டதாக, மேஜர் ஜெனரல ஜெகத் டயஸ் தெரிவித்துள்ளார்.

உலகின் ஏனைய பகுதிகளிலும் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவங்களின் கட்டளை அதிகாரிகளும் கூட இதுபோன்ற அவமானங்களைச் சந்தித்துள்ள போதிலும், அந்தக் குற்றச்சாட்டுகள் வரையறைக்குட்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் அனைத்துலக சமூகத்துடன் நெருக்கமாக இணைந்து செயற்படுகின்றனர். எனக்கு வீசா மறுக்கப்பட்டது தனியானதொரு விடயமல்ல.

ஒரு முறையான இராணுவத்தால், இலக்கு வைக்கப்பட்ட தீவிரவாதத்துக்கு உலகின் பல பாகங்களிலும் புகலிடம் கொடுககப்படுகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜெகத் டயசுக்கு வீசா வழங்க முடி யாது என்று அவுஸ்ரேலிய தூதரகம், இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தது.

# மீண்டும் வெடிக்கும் தொழிற்சங்கப் போர்

(கொழும்பு)

இரண்டு வாரங்களுக்குள் தங்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்காவிட்டால், மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாக, தாதியர்கள் மற்றும் மருத்துவ தொழில்நுட்ப உதவியாளரகளின் ஒன்றிணைந்த தொழிற சங்கம் தெரிவித்துள்ளது

அதன் இணைப்பாளர் சமன் ரத்னபிரிய இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆறு கோரிக்கைகயை முன்வைத்து கடந்த நவம்பர் மாதம் முதல் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர்கள் தொழிற் சங்க போராட்டங்களில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# சித்திரவதைகளுக்கு எதிரான விசாரணை காலவரையறையின்றி பிற்போட வாய்ப்பு

## இராஜதந்திர நகர்வுக்கு வெற்றி

(கொழும்பு)

சித்திரவதைகளுக்கெதிரான சர்வதேச விசாரணையைத் தவிர்த்துக் கொள்வதற்கு அரசு மேற்கொண்ட இராஜதந்திர முயற்சி வெற்றியளித்துள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி விசாரணைகளை நடாத்துவதற்கு பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படவிருந்தது.

எனினும், நடந்து முடிந்த பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டுக்குப் பின்னர் நிகழ்ந்த சில இராஜதந்திர நகர்வுகளுக்குப் பின்னர் மேற்படி விசாரணையை பிற்போடுவதற்கு இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

காலவரையறையற்ற நிலையில் இது பிற்போடப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவே இந்த விசாரணைகளை நடத்தவிருந்தது.

இதன்போது இலங்கை படையினர் இறுதிப்போரின் போது மேற்கொண்டதாக சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை பொதுநலவாய நாடுகளின் செயல்ாளர் கமலேஸ் சர்மாவும் உறுதிப்படுத்தியிருந்தார்.

எனினும் சமூக நிறுவனங்களின் வேண்டுகோளை ஏற்று இந்த விசாரணைகளை காலவரையற்ற நிலையில் ஒத்திவைத்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தரப்பு தெரிவித்துள்ளது.

இந்த பிற்போடல் முடிவுக்கு பொதுநலவாய நாடுகளின் விசாரணைப் பிரிவும் உடன்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

# ஆயிரம் பாடசாலைத்திட்டத்தில் இணைகிறது

(வவுனியா)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளதாக பிரதி கல்வி அமைச்சர் மோகன்லால் கிரேரோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உயர் கல்வி, கல்விச் சேவைகள், தொழிநுட்ப ஆராய்ச்சி ஆகிய அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தகருத்துக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும் இந்த விஞ்ஞான தொழில்நுட்பப் பிரிவுக்குள் உள்வாங்கப்பட்டாலும் துரதிஷ்டவசமாக அது ஆயிரம் பாடசாலைத்திட்டத்துக்குள் உள்வாங்கப்படாத பாடசாலையாகக கணிக்கப்படுவதால் இந்த தொழில்நுட்பக்கல்வி வகுபபுக்களை அங்கு ஆரம்பிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.

அங்கு சுமார் 65 மாணவர்கள் இதற்குத் தகைமையுடையவர்களாக இருந்தபோதிலும் ஆயிரம் பாடசாலைத் திட்டத்துக்குள் அது உள்வாங்கப்படாத நிலைமையினால் அந்த மாணவர்கள் துரதிஷ்டவசமாக கலை வர்த்தகப் பிரிவுகளுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 3200 மாணவர்களைக் கொண்ட அந்த மிகப் பெரிய பாடசாலைக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருப்பது வருத்தத்துக்குரியது. இது விடயம் தொடர்பாக அமைச்சருக்கு கடிதம் எழுதியிருக்கின்றேன். இது தொடர்பாக அமைச்சர் உரிய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக கூறியிருக்கின்றார். இன்று கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் எல்லாம் இங்கு வந்திருக்கின்றார்கள். இது தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடி ஒரு முடிவை அறிவிக்க வேண்டும் என்பதை நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். எனச் சந்திரகுமார் தனது கருத்தைத்தெரிவித்தார்.

இதற்கு பிரதி கல்வி அமைச்சர், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தினை ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் உள்வாங்குவதற்கான நடவடிகைகள் இன்றையதினமே எடுக்கப்படும் என அறி வித்துள்ளார். இதன்மூலம் இந்தப் பாடசாலை மகிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூட வசதிகள் உள்ளிட்ட ஆயிரம் பாடசா லைத்திட்டத்தின கீழ் வருகின்ற எல்லா நன்மைகளையும் பெற்றுக்கொள்ளவுள்ளது. குறிப்பாக 65 இற்கு மேற்பட்ட மாணவர்கள் தாங்கள் விரும்பிய தகவல் தொழிநுட்ப பாட நெறியை தெரிவு செய்வதற்கான வாய்ப்பும் கிட்டியுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (29)



முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்சேவை மன்றத்தினால் மாவட்டசெயலகத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டின் பதிவு.... (40)

# புதிய நிர்வாகத்தெரிவு

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் (யாழ்.மாவட்டம்) வருடாந்த பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. ஆசிரியர் ஆர்.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது.

சங்கத்தின் புதிய தலைவராக ரி.செந்தூரன், செயலாளராக செ.சிவசுதன், பொருளாளராக கட்சின்றோய் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஐந்து வலயங்களுக்கான பிரதிநிதிகள் தலா இரண்டு பேர் வீதம் 10 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் ஆசிரியர்களது இடமாற்றம் தொடர்பிலும் ஆசிரியர்களது கோப்புக்கள் தொடர்பிலும் முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன. (17)

# விண்ணப்பங்கோரல்

தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் தீவில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

நிர்வாக அதிகாரி - 01 உதவி பணிப்பாளர் நிதி, உள்ளக கணக்காளர் போன்ற 3 பதவிகளுக்கே விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. எழுத்து மூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். விண்ணப்பங்களை எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் தவிசாளர், தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, 383, கோட்டே றோட் ராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

# சிறப்புச் சொற்பொழிவு

(திருநெல்வேலி)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் திருவெம்பாவை விரத காலவிசேட சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு சுன்னாகம் சொர்ணாவரத காளி அம்பாள் ஆலயத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் 'மெய்ப்பாடும் மணிவாசகமும்' என்னும் தலைப்பில் ஆசிரியர் செ.பாலச்சந்திரன் சொற் பொழிவாற்றவுள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை காலை 5.30 மணிக்கு தாவடி முருகமூர்த்தி ஆலயத்தில் சொற்பொழிவு இடம் பெறும் 'அமுதால' உன்னைப் பெறலாமே என்னும் தலைப்பில் கீழ் சைவப் புலவர், கா.கமலநாதன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

அன்று காலை 5.30 மணிக்கு மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் இந்து தர்மாசிரியர் நித்தியதசீதரன் 'திருவாசகம் எனும் தேன்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார் (137)

# பயிற்சிப்பட்டறை

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு ஊடகம் தொடர்பான ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை இன்று காலை 8 மணிக்கு அமையத்தின் தலைவர் த.வினோஜித் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அறிமுகவுரையை மூத்த ஊடகவியலாளர் இ.தயாபரன் விரிவுரையை வண.பிதா.மரியம்பிள்ளை ஆகியோர் வழங்குவர்.

# காரை.ஈழத்துச்சிதம்பரத்தில் திருவெம்பாவை உற்சவம்

## விசேட பஸ் சேவைக்கு ஏற்பாடு

(யாழ்.நிருபர்)

'ஈழத்துச் சிதம்பரம்' காரைநகர் திண்ணபுரம் கோவிலில் இன்று திருவெம்பாவை உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை கைலாசவாகனத்திருவிழாவும் 16ஆம் திகதி திங்கட்கிழமை இரவு பெரிய சப்பரத்திருவிழாவும் இடம்பெறும்.

17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவத் திருவிழாவில் பஞ்சரத பவனியும் இரவு நடேசர் அபிசேகம் மறுநாள் காலை ஆருத்திரா தரிசனம் மற்றும் தீர்த்தோற்சவம் என்பனவும் இடம்பெறும்.

திருவிழாக்காலங்களில் ஆலயம் வரை போக்குவரத்து சேவைகள் இடம் பெறுவதோடு மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினர் 10 நாட்களும் அன்னதானம் வழங்கவுள்ளனர்.

# கவனிப்பாரற்ற நிலையில் சனசமூக நிலையம்

(கொடிகாமம்)

சாவகச்சேரி அரசடி சந்திக்கு அண்மையில் உள்ள சனசமூக நிலைய கட்டடமானது கவனிப்பாரற்று கறையான் புற்றுக்களால் மூடும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. கட்டடமானது சேதமடைந்து மரங்கள் உடைந்து விழும் நிலையில் உள்ளது. இவ் நிலையமானது A9 வீதிக்கு அருகாமையில் இருப்பதனால் பெருமளவான பொதுமக்கள் இவ் சனசமூக நிலையத்தினை பயன்படுத்தி பயன் பெற்று வந்தனர். ஆனால் தற்போது கவனிப்பாரற்று இருள் சூழ்ந்து காணப்படுகின்றது.

இவ் நிலையமானது ஒரு காலகட்டத்தில் ஐக்கிய நாணய சங்கமாக செயற்பட்டுவந்துள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து இவ் சனசமூகநிலையமானது புதுப்பொலிவுடன் இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கைவிடுக்கின்றனர். (130)

# ஒளிவிழா நிகழ்வு

(யாழ்.நிருபர்)

யாழ்.சென்.சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் ஒளிவிழா நிகழ்வுகள் கடந்த வாரம் கல்லூரி அதிபர் திருமதி.இ.கிறிஸ்ரபல் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி.எஸ்.எஸ்.செபஸ்ரியன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் அருட்தந்தை றெக்னோ அடிகளார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். ஒளிவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பிரதம விருந்தினர் திருமதி.எஸ்.எஸ். செபஸ்ரியன் பரிசில்களை வழங்கினார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (10)

# முரசின் இன்றைய பலன்

(09.12.2013 திங்கட்கிழமை)



**விஜய வருஷம் கார்த்திகை மாதம் 23 ஆம் திகதி.**
**திருவெம்பாவை பூஜா ஆரம்பம்.**
**சதய நட்சத்திரம் மு.இ. 08.06 வரை. பின் பூரட்டாதி. சப்தம்/சித்தம்.**
**இராகுகாலம் 07.48 - 09.18 வரை. சுபநேரம் 12.18 - 01.48 வரை.**

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | அனுமதியில் பாகுபாடு காட்டியதை நியாயப்படுத்தியபடியினால் முரண்பாடு தோன்றி பகைமை ஏற்படல், விசாவிதி முறைகளை மீறிச் செயற்பட்டதால் சட்ட நடவழக்கைக்கு உட்படுதல். |
| ரிஷபம் | தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் பெற்றதால் மட்டற்ற மகிழ்ச்சியடைதல், பிள்ளைகளின் நலனில் அக்கறை. |
| மிதுனம் | சாப்பாட்டு நேரத்தை ஒழுங்கு முறையில் அமைக்காததால் 'இரப்பைப்புண்' ஏற்பட்டு அவதியடைதல், பழைய சம்பவங்களை மீட்டு நினைவுகூர்ந்து ஆனந்தமயமான சூழலில் இருத்தல். |
| கடகம் | பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்பாரின்றி முதியோர் இல்லத்தில் சேரல், சோகத்திலும் மனதைத் தளரவிடாது உறுதியுடன் செயற்படுதல். |
| சிம்மம் | பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு கவனயீர்ப்பு போராட்டத்தின் மூலம் கோரிக்கைகளை அடைய முயற்சித்தல், மதுப்பாவனையால் குடும்பத்தின் கலவரம். |
| கன்னி | வாழ்க்கைச் செலவுப்பழுயில் சமநிலை பேணப்படாமைகண்டு ஓய்வுதியர் கவலைமிகக்கொள்ளல், வேலைவாய்ப்பு நிச்சயமின்மையால் தொண்டர் தொழிலைக் கைவிட எண்ணம். |
| துலாம் | நண்பர்யார்? பகைவர் எவர்? என எடைபோட்டதால் காரியங்கள் சுலபமாக முழுவடைய உதவிகிட்டுதல், வேலியே பயிரைமேய்வதால் நம்பகத்தன்மை அற்றுப் போதல். |
| விருச்சிகம் | கொடுத்த வாக்குறுதியை எப்பாடுபட்டாயினும் நிறைவேற்ற முயலுதல், முன்கோபத்தையும், எரிந்து விழுவதையும் தவிர்த்ததால் சக ஊழியரின் அரவணைப்பு கிட்டும். |
| தனுசு | தவறிவிட்ட பொருட்களைப் பெற விளம்பரம் மேற்கொண்டதால் மீண்டும் கிடைத்தல், பதவியின் பெருமையினால் மதியாமை ஏற்பட்டால் முரண்பாடு தோன்றல். |
| மகரம் | அறிவுரையை பகிர்ந்துகொள்ளுதல், புகைப் பொருட்களை பதின்ம வயதினருக்கு விற்றதால் சட்டத்தின் பிடியில் சிக்குப்படல். |
| கும்பம் | முரண்பாடு களைவதற்கு சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதனால் பிரச்சினை விலகிவிடல், நீண்ட காலமாக இழுபட்டுவந்த பதவி உயர்வு கிட்டியதால் மகிழ்வடைதல். |
| மீனம் | அட்டமத்துச் சனீஸ்வரனின் கெடுதியான பார்வையினும் தப்பிப்பிழைக்க கவனம் எடுத்தல், சகோதரர் மத்தியில் நிலவி வந்த பிணக்கு விட்டுக் கொடுப்பினால் நற்பலன் ஏற்படல். |

# அடிலெய்ட்டில் வலுக்கிறது ஆஸியின் ஆதிக்கம்

## வேகத்தில் வேகிறது இங்கிலாந்து துடுப்பாட்டம்



(அடிலெய்ட்)

அடிலெய்ட் டெஸ்ட் போட்டியிலும் வெற்றிக்கான பாதையை அவுஸ்ரேலிய அணி வலுவாக்கிக்கொண்டுள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்கஆஷஸ் டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் அவுஸ்ரேலியாவின் அடிலெய்ட்டில் நடைபெற்று வருகின்றது.

இரண்டாவது இனிங்ஸிற்காக மூன்று விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவுஸ்ரேலிய அணி, நான்காவது நாளில் தொடர்ந்தும் துடுப்பாடும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில் இனிங்ஸை இடைநிறுத்து வதாக அவுஸ்ரேலிய அணிக் கப்டன் கிளார்க் அறிவித்தார். இதன்படி 530 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக இங்கிலாந்து அணி களமிறங்கியது. களைப்பின்றி களமிறங்கிய இங்கிலாந்து வீரர்கள் நிதானமாக ஆடி அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி,வெற்றியையோ அல்லது போட்டியை சமநிலைக்கோ இட்டுச் செல்வார்கள் என்ற நம்பிக்கை இங்கிலாந்து தரப்பு ஆதரவாளர்களிடையே துளிர்விட்டதுஆனால், இந்த நம்பிக்கையை சிதைக்கும் வியூகத்துடன் அவுஸ்ரேலியஅணி களமிறங்கியது. ஜோன்சனின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாத கப்டன் குக் அவரிடம் தனது விக்கெட்டை தாரை வார்த்து வெளியேறினார். தொடர்ந்துகார்பெறியும் வெளியேற இங்கிலாந்து நெருக்கடியை எதிர்நோக்கியது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த கெவின் பீற்றர்சன், ரூத் இணை மிக நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஜோடியின் ஆட்டம் இங்கிலாந்து தரப்புக்கு மகிழ்ச்சியையும், அவுஸ்ரேலியா தரப்பிற்கு வெறுப்பையும் ஏற்படுத்தியது. இருப்பினும் இந்த ஜோடி 111 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது.இதனைத் தொடர்ந்து வந்தவர்கள் விரைவாக வெளியேற்றப்பட்டனர். இருப்பினும் ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த மட் ப்ரியர், ஸ்ரூவெட் புரொட் ஜோடி நிதானமாக ஆடி வருகின்றது. இறுதியில் நேற்றைய நான்காம் நாள் நிறைவுக்கு வந்தவேளை, இங்கிலாந்து அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ரூத் 194 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 87, பீற்றர்சன் 99 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். மட் ப்ரியர் 70 பந்துகளை எதிர்கொண்டு 31, ஸ்ரூவெர்ட் புரொட் 23 பந்துகளை எதிர்கொண்டு 22 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். பந்து வீச்சில் பீற்றர் சிடில் இரண்டு, ஜோன்சன், நதன் லயன், ஹரிஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றியுள்ளனர். இன்று போட்டியின் இறுதி நாளாகும். அணி நான்கு விக்கெட்டுக்களைக் கைவசம் கொண்டுள்ள இங்கிலாந்து இப்போட்டியில் வெற்றி பெற இன்னும் 284 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது. அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 570/9. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 172. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.



## சம்பியனுக்கு கௌரவம்

சர்வதேச மோட்டார் பந்தய கூட்டமைப்பின் வருடாந்த விருது வழங்கும் விழா, பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில், 2013இம் ஆண்டு பார்முலா 1 கார் பந்தய சீசனில் அபாரமாக செயற்பட்டு உலக சம்பியன் பட்டத்தை தக்க வைத்துக் கொண்ட ரெட் புல் அணி வீரர் செபாஸ்டியன் வெட்டல் கௌரவிக்கப்பட்டார்.

## அரையிறுதியில் அமெரிக்கா, இந்தியா

(பஞ்சாப்)

உலகக் கிண்ண கபடிப் போட்டித் தொடரின் அரையிறுதிக்கு அமெரிக்க, இந்திய அணிகள் தகுதி பெற்றுள்ளன.

நான்காவது உலக கிண்ணக் கபடிப் போட்டி பஞ்சாப்பில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் (ஏ பிரிவு) நடப்பு சம்பியன் இந்திய அணி 50-32 என்ற புள்ளி கணக்கில் ஆர்ஜென்ரீனாவை தோற்கடித்தது. 4ஆவது வெற்றியை பெற்று இந்தியா அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் அமெரிக்கா 51-26 என்ற புள்ளி கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி அரையிறுதிக்கு நுழைந்தது.



## மண்டேலா கண்ட ஒலிம்பிக் கனவு

(லாசன்னே)

தென்னாபிரிக்காவில் ஒலிம்பிக் போட்டியை நடத்த வேண்டும் என்ற மண்டேலாவின் கனவு நனவாகவில்லை.

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் மண்டேலா, கடந்த 6ஆம் திகதி மரணமடைந்தார். விளையாட்டு பிரியரான இவர், தென்னாபிரிக்காவில் 1995இல் ரக்பி உலக கோப்பை,1996இல் ஆபிரிக்க கால்பந்துப் போட்டி, 2010இல் பிபா உலக கோப்பை கால்பந்து தொடர் போன்ற மெகா விளையாட்டுகள் நடத்த காரணமாக இருந்தார். ஒலிம்பிக் போட்டியை நடத்த வேண்டும் என்பதிலும், தீராத தாகம் கொண்டிருந்தாராம்.

இதுகுறித்து சர்வதேச ஒலிம்பிக் சபையின் (ஐ.ஒ.சி.,) தென்னாபிரிக்க பிரதிநிதி சாம் ராமசாமி குறிப்பிடுகையில், மண்டேலா மறைவால், எல்லோரையும் போல நாமும் துயரப்பட்டுக் கொண்டுள்ளோம். உலகின் பெரிய விளையாட்டுக்கள் தென்னாபிரிக்க மண்ணில் நடக்க வேண்டும் என விரும்பினார்.

முக்கியமாக ஒலிம்பிக் போட்டியை எப்படியும் இங்கு கொண்டு வர வேண்டும் என எண்ணினார். கடைசியாக அவரை எட்டு மாதங்களுக்கு முன் சந்தித்தேன். அப்போது, சாம், நாம் எப்போது ஒலிம்பிக் போட்டியை நடத்தப் போகிறோம் என்று கேட்டார்.

அவரது கடைசி ஆசையை நினைவில் வைத்துக் கொண்டு, தென்னாபிரிக்க மண்ணில் விரைவில் ஒலிம்பிக் போட்டியை நடத்த முயற்சிப்போம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் கப்டன் லாராவும் மண்டேலாவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

மண்டேலாவை சந்தித்தது என் வாழ்க்கையின் பொன்னான நாள். விளையாட்டில் ஆர்வம் கொண்ட அவர் மனம் சிறுபிள்ளை போன்றது. எந்தவித அகங்காரமும் அற்ற மாமனிதர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தொடரை வெல்வோம்

### ஹபீஸ் நம்பிக்கை

இலங்கை அணிக்கெதிரான ருவென்ரி-20 தொடரை கைப்பற்றுவோம் என பாகிஸ்தான் அணியின் ருவென்ரி-20 கப்டன் மொகமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் சார்ஜாவில் நடைபெறவுள்ளது. இதில் இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி - 20 தொடர் நாளை மறுதினம் நடைபெறவுள்ளன.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மொகமட் ஹபீஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், அணித் தேர்வின்போது கிரிக்கெட் சபை என்னுடன் விவாதிக்கவில்லை. இருப்பினும் எனக்கு தரப்பட்டுள்ள அணியை ஒருங்கிணைத்து முடிந்தளவு வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வேன்.

இலங்கை அணி வலுவான, சமபலம் கொண்ட அணி. இருப்பினும் எங்கள் அணி சிறந்த பந்து வீச்சாளர்களையும், துடுப்பாட்ட வீரர்களையும் கொண்டுள்ளதால் தொடரை வெல்ல முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தனர்.

## முத்தத்தால் வந்த வில்லங்கம்



2013ஆம் ஆண்டிற்கான சிறந்த கால்பந்து வீரர் என்ற் விருதினை எகிப்திய வீரர் மொகமட் சாலாவுக்கு சுவிஸ் சூப்பர் அணி வழங்கி கௌரவித்துள்ளது. சுவிஸ் நாட்டில் 2013ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விருது வழங்கும் விழா நடைபெற்றது. இதில் எகிப்திய வீரர் மொகமட் சாலா (21) என்பவருக்கு சிறந்த கால்பந்து வீரருக்கான விருது வழங்கப்பட்டது. இவர் விருதைப் பெற்றுக்கொள்ளும்போது நிகழ்ச்சி தொகுப்பாளராக கடமையாற்றி பெண் இவரது கன்னத்தில் முத்தமிட்டுள்ளார்.

சுவிஸ் நாட்டு வழக்கப்படி கன்னத்தில் அன்பு முத்தங்களை ஆணும், பெண்ணும் பரிமாறிக்கொள்வதில் எந்தவித தவறும் இல்லை. ஆனால் எகிப்திலும், அரபு நாடுகளிலும் இந்த சம்பவமானது கடுமையாக விமர்சிக்கப்பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மொகமட் சாலா கூறுகையில், 2013ஆம் ஆண்டிற்கான விருதை மறந்துவிட்டு பெண் தொகுப்பாளர் கன்னத்தில் முத்தம் கொடுத்ததை மட்டுமே கவனத்தில் கொண்டுள்ளனர் என்றும் அவர்களது கடுமையான விமர்சனம் என் சந்தோஷத்தை இழக்கச் செய்கிறது எனவும் கூறியுள்ளார்.

மேலும் சுவிஸ் நாட்டில் நான் எங்கு சென்றாலும் என்னை காண்கின்ற மக்கள் கைதட்டி ஆரவாரத்துடன் வரவேற்கின்றனர், ஆனால் என் நாட்டு மக்களோ என்னைக் கடுமையாக விமர்சித்துள்ளனர் என்று வருத்தத்தை தெரிவித்துள்ளார். சாலா 2012ஆம் ஆண்டிலிருந்து சுவிஸ் கால்பந்தாட்ட அணியில் பங்கேற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக் சபை இந்தியாவுக்கு மிரட்டல்

ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து இந்தியா விலக்கப்படக் கூடும் என்று சர்வதேச ஒலிம்பிக் சபைத் தலைவர் தோமஸ் பச் தெரிவித்துள்ளார். சிறந்த நிர்வாகம் என்பதுதான் சர்வதேச ஒலிம்பிக் சபையின் முக்கிய கொள்கையாகும்.

எனவே இந்திய ஒலிம்பிக் சங்கத்தில் உள்ள ஊழல் கறை படிந்த அதிகாரிகள் வெளியேற்றப்படாவிடில் ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து இந்தியா விலக்கப்படக்கூடும்.

நாளை செவ்வாய்க்கிழமைக்குள் நல்ல நிர்வாகத்திற்கான விதிமுறைகளை இந்திய ஒலிம்பிக் சங்கம் சமர்ப்பிக்கத் தவறினால் அவர்களின் அங்கீகாரம் திரும்பப் பெறப்படும்.

கடந்த 40 வருடங்களுக்கு முன்னால் இனவெறிக் கொள்கைகளின் காரணமாக தென்னாபிரிக்கா ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பெறுவது தடை செய்யப்பட்டது. தற்போது இந்தியா வெளியேற்றப்படுமானால் மக்கள் தொகையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் இந்தியாவிற்கு இது ஒரு தண்டனையாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



விளையாட்டுச் செய்திகள்

# மைலோ கிண்ண கால்பந்து

## துரையப்பாவில் இன்று 2ஆம் கட்டத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் யாழ்ப்பாண லீக் அணிகளுக்கிடையிலான தெரிவுப் போட்டி இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரினால் முதன் முறையாக ஒழுங்கமைத்து நடாத்தப்பட்டு வரும் மைலோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அணிகளுக்கிடையிலான தெரிவுப் போட்டிகள் நிறைவடைந்துள்ளன.

பருத்தித்துறை இமையாணன் விளையாட்டு அரங்கில் கடந்த 5,6,7,8ஆம் திகதிகளில் நடைபெற்ற இப்போட்டிகளில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ், பருத்தித்துறை கொலின்ஸ், மணற்காடு சென். அன்ரனீஸ், யங்கமன்ஸ், சென்.சேவியர், உடுப்பிட்டி யுத், வதிரி பொம்மேர்ஸ், வதிரி டையமன்ஸ், வல்வெட்டித்துறை வல்லை, இமையாணன் மத்தி, பொலிகை விண்மீன், கலைமதி அணிகள் பங்குகொண்டன. விலகல் முறையில் நடைபெற்ற இத்தெரிவுப் போட்டியில் கொலின்ஸ், வல்லை, விண்மீன், டையமன்ஸ் அணிகள் தகுதி பெற்றன.

இந்நிலையில் யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் அணிகளுக்கிடையிலான தெரிவுப் போட்டிகள் இன்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டுஅரங்கில் நடைபெறவுள்ளது.இதில் நாவாந்துறை சென். மேரிஸ், இளவாலை யங்ஹென்றீஸ், தீவகம், அரியாலை ஐக்கியம், மயிலங்காடு ஞானமுருகன், மானிப்பாய் றெட்றே எசர்ஸ், குருநகர் பாடுமீன், ஊரெழு றோயல், பாசையூர் சென். அன்ரனீஸ், நாவாந்துறை சென். நீக்கிலஸ், யாழ்.ஐக்கியம், சென். பீற்றர்ஸ் அணிகள் மோதவுள்ளன. இதில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிச் சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெறும்.

இறுதிச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 11,12, 13ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளதாகவும், 1,2,3ஆம் இடங்களைப் பிடிக்கும் அணிகளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும், கேடயங்களும் வழங்கப்படும் எனவும், சிறந்த ஆட்டநாயகன், தொடர் நாயகன், சிறந்த கோல்காப்பாளர், சிறந்த அணிக்கான சிறப்பு விருதுகளும் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## விரைவில் வலய மட்ட கால்பந்து

(தெல்லிப்பளை)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான வலய மட்ட கால்பந்தாட்டப் போட்டி விரைவில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்போட்டித்தொடருக்கான நிரலிடல் நிறைவடைந்திருப்பதாகவும், இப்போட்டிகளை அடுத்த மாதம் 7,8,9ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். இதில் 14,16,18 வயது பிரிவு ஆண்கள் மற்றும் 19 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## பாடுமீன், அண்ணாஸ்ரார் அரையிறுதிக்கு முன்னேற்றம்

(உரும்பிராய்)

யாழ். கால்பந்தாட்ட தலைவர் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு குருநகர் பாடுமீன், அண்ணாஸ்ரார் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் யாழ்ப்பாண லீக் தலைவர் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டித் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைாதனத்தில் நடைபெற்று வருகின்றது.

அணிக்கு 11 பேர் கொண்ட இக்கால்பந்தாட்டத் தொடரின் இரண்டு காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இதில் முதலாவது காலிறுதிப் போட்டியில் உரும்பிராய் அண்ணாஸ்ரார் அணியும் குருநகர் சென். றொக்ஸ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய அண்ணாஸ்ரார் அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியும், குருநகர் பாடுமீன் அணியும் மோதின. இரு அணிகளும் சமபலம் கொண்ட அணி என்பதால் பந்தை மாறி மாறிக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

அத்துடன் பிற்கள வீரர்களின் சிறப்பான தடுப்பணையால் கோல் எல்லைக்குள் இரு அணிகளாலும் முன்னேற முடியவில்லை. இதன் காரணமாக இரு அணிகளாலும் கோல் எதுவும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் பாடுமீன் அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

ஏற்கனவே, பாசையூர் சென். அன்ரனீஸ், உரும்பிராய் திருக்குமரன் அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இன்றைய தினம் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் திருக்குமரன் அணியை எதிர்த்து பாடுமீன் அணி மோதவுள்ளது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொறியியல் பிரிவு சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அமைச்சுக்களுக்கிடையில் நடைபெற்ற கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பிரதிப் பிரதம செயலாளர் பொறியியல் பிரிவு அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

வடமாகாண அமைச்சு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் பல அமைச்சு அணிகள் மோதிக்கொண்டபோதும், இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு பிரதிப் பிரதம செயலாளர் பொறியியல் பிரிவு அணியும், பிரதம செயலாளர் அணியும் மோதின. இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதின. இறுதியில் பிரதம செயலாளர் பொறியியல் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

## வழிகாட்டல் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கரப்பந்தாட்ட சங்கத்தின் சி தர மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தோற்றவுள்ள மத்தியஸ் தர்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்களை யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடாத்தி வருகின்றது.

அந்த வகையில் மத்தியஸ்தர் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டல் வகுப்பு நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் செய்ன்முறை மூலமான விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

இதில் பலர் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது. இதன் வளவாளர்களாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர். (93)

## வென்றது யாழ். பாரதி

(கொழும்புத்துறை)

சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் யாழ். பாரதி அணி அபார வெற்றி பெற்றது.

கொழும்புத்துறை ஜெற்லைனர்ஸ் மற்றும் யாழ். பாரதி அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். பாரதி அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. குறிப்பாக, மொறாய்ஸ் தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தி ஹட்ரிக் கோல் அடித்து அசத்தியதுடன் அணியின் முன்னிலைப்படுத்தினார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் முனைப்புடன் செயற்பட்ட ஜெற் லைனர்ஸ் அணி இரு கோல்களைப் போட்டது. இறுதியில் யாழ். பாரதி அணி 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.


இதேவேளை, அநேகமான இடங்களில் சிநேகபூர்வ ஆட்டங்கள் அதிகம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.)



சண்டிலிப்பாய் கோட்ட மட்ட கால்பந்தாட்டத் தொடரின் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியைக் காணலாம். அண்மையில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஹென்றியரசர் கல்லூரி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)

# தொல்லைகள் போதும் தள்ளியிருங்கள்....!



நான் சொல்ல வருபவை விமர்சனமோ, தென்னிந்திய தமிழ்மக்கள் முழுமை மீதான குற்றச்சாட்டோ அல்ல.

எமது குற்றச்சாட்டுக்குரிய மூன்று பிரிவினர்! இந்த மூன்று பிரிவையும் மொத்தமாகப் பார்த்தாலே எண்ணிக்கை 50 ஐக் கூட எட்டாது. இருந்தும் இந்தத் தீத்தலைகளால் எரிந்த எரியப் போகின்ற இலங்கைத் தமிழர்களின் தொகை கணக்கிட முடியாது!

தென்னிந்தியாவில் ஈழத்தமிழ் உணர்வாளர்கள் ஒரு பிரிவு. இவர்கள் அவ்வப்போது ஏற்றும் தீப் பந்தத்துக்கு நெய்யூற்றி இந்தியத் தமிழ் மக்களின் உணர்வுகளை கொழுந்துவிட்டு எரியச்செய்து, உணர்வு மயப்படுத்தி இளைஞர்களைத் தீக்குளிக்கவைத்து இதன் மூலம் புலம்பெயர் புலி ஆதர வாளர்களைக் குளிர வைத்து. அவர்கள் பணத்தில் குளிர் காய்பவர்கள். சீமான், நெடுமாறன் அடங்கலான சிறு வட்டம்.

அடுத்து வருபவர்கள் இலங்கைத் தமிழர்களின் உயிர்களை உரமாக்கி ஆட்சிப் பதவிகளை அறுவடை செய்பவர்கள். இதில் சமயக்கட்சி டாக்டர், சாதிக்கட்சி வளவன், நிதிப்பார்ட்டி சிதம்பரம் போன்றவர்கள். இலங்கை நாட்டுக்குள் இருக்கும் மூவின மக்களும் அறிந்ததும், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சும், இந்திய அரசும் ஒப்புக்கொண்ட அப்பட்டமான உண்மை! புலிகளை அழிக்கும் இறுதிக்கட்டப் போரில் கள உதவிகள், விமானங்கள் என இந்திய அரசின் பங்களிப்புக் கணிசமாக இருந்தது. இதை சிதம்பரம் மறுக்கிறது. கேவலம் ஓட்டுப் பொறுக்குவற்கான பொய் இது! அதோடு ராஜீவ்காந்தியை உடல்சிதறக் கொலை செய்தது இலங்கை அரசாம் என்கிறார்? அரசிடம் எப்போ தற்கொலைக் குண்டுதாரி?

தென்னிந்திய மக்களே இலங்கைக் தமிழருக்கு உதவுவது இருக்கட்டும்? இந்தப் பொய்யர்களையும் பித்தலாட்டக் காரர்களையும் நம்பி மக்கள் வாக்களிக்கின்ற நிலையை அங்கு மாற்றுவதற்கு வேலை செய்யுங்கள். தமிழக அரசியலில் நேர்மை பிறந்தாலே இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

மூன்றாவது வகை போலித் தனமிக்க நீலிக் கண்ணீர் வடிக்கும் நடிகர்கள். இவர்களது சங்கத் தீர்மானங்கள்! குடுமியைச் சும்மா ஆட்டுவார்களா....?

சினிமா, சினிமா சார் விற்பனைப் பொருட்கள், புடவைகள், நகைகள், உணவுப் பண்டங்கள், மரக்கறி, மீன் இத்தியாதிகளை விற்பனை செய்யக் கிடைக்கும் புலம் பெயர் தமிழர் சந்தையைத் தென்னிந்திய வர்த்தகம் தக்க வைத்துக்கொள்ளவேண்டும்.

இதற்காக இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் நடிகர் சங்கத்தில்..... நடிக, நடிகையர் யாரும் இலங்கை அழைப்புகளுக்கோ நடிப்புக்கோ போகக் கூடாது. ஆனால் இலங்கையில் தரங்கெட்ட தென்னிந்திய சினிமாவுக்கு சந்தையுண்டு! அனுமதியுமுண்டு. பற்பொடியிலிருந்து மோட்டார் சைக்கிள் கார்கள் வரை எல்லாப்பொருட்களும் வரலாம், வியாபாரம் நடக்கலாம்.

குறித்த இந்த மூன்று வகையறாக்களுக்குமே ஏதோ ஒருவிதத்தில் இலங்கைத் தமிழரின் இரத்தம் தேவைப் படுகிறது! இதற்கென்றே இலங்கை அரசை உசுப்பேத்தி உசுப்பேத்தி நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கின்றன.

தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு! உரிமையும் பொருளாதார விடுதலையும் எமக்குரியவை. இறையாண்மையுள்ள ஒரு நாட்டுக்குள் நாம் இருக்கிறோம். எங்களுடைய தேவைகளை உரிமைகளை நாம் எப்படியாவது போராடிப் பெறுவோம்.

அழுதழுதும் பிரசவ வலியை நாங்கள் தாங்குவோம்! இந்த இரவல் நடிப்பால் எமது வேதனை தீரப்போவதில்லை!

"தாய்நாடு, சேய் நாடு என்ற பாச வசனமும்", "எழுவாய் தமிழா நெருப்பாய்" என்ற வீரா வேச வசனங்களும் இதுவரை எதைக் கிழித்துக் கொட்டிவிட்டன? இலங்கைத் தமிழருக்கு? மேலும் மேலும் இன்னல்களே பிரசவித்தன.

கிழித்ததெல்லாம் போதும்!

- லோகநாதன் (ஜேர்மனி) கட்டுரையிலிருந்து.

தள்ளிப் படுங்கள் அதுவே எமக்குப் பெரிய உதவி.

உங்களது முப்பிரிவுமே இலங்கைத் தமிழர்களுக்கு, இலங்கை மீனவர்களுக்கு தீமைகளை விளைவிக்கிறார்கள் எனத் தெரிந்தும் நேர்மையை மௌனம் சாதிக்கிறார்கள்.

ஓட்டு முறைக் கேவல இந்திய அரசியலில் யாரும் விதிவிலக்கல்ல. இந்தியக் கம்யூனிஸ்டுகள் கூட சாம்பல் புட்டியில் படுக்கும் சோம்பல் பிடித்த வையிரவர் வாகனங்களாகத் தான் இருக்கிறார்கள்.

# தற்செயல் ஹீரோக்கள்!

- யுவகிருஷ்ணா -



எம்.ஜி.ஆர் நாயகவேடத்துக்கு பொருத்தமான முகவெட்டு கொண்டவர் அல்ல என்று எல்லீஸ் ஆர்.டங்கனால் ஆரம்பத்தில் மறுக்கப்பட்டிருக்கிறார். (எம்.ஜி.ஆரை சதிலீலாவதியில் அறிமுகப்படுத்தியவரே டங்கன்தான் என்பது வேறு விஷயம்)

எம்.ஜி.ஆர் மட்டுமல்ல. பல நாயகர்களுக்கும் ஆரம்பத்தில் இதே நிலைமைதான்.

சிவாஜி பராசக்தியில் நடித்துக் கொண்டிருந்தபோது, தயாரிப்பாளர்களில் ஒருவரான மெய்யப்ப செட்டியாருக்கு "ரஷ்" பார்த்து, அவரை பிடிக்கவில்லை. "மீன் உணவுக்காக வாயைத் திறந்து திறந்து மூடுவது மாதிரியிருக்கிறது" என்று சிவாஜியின் வசனம் பேசும் முறை நக்கல் அடிக்கப்பட்டது. கருணாநிதி மற்றும் இயக்குனர்கள் கிருஷ்ணன் பஞ்சு ஆகியோர் விடாப்பிடியாக சிவாஜியை சிபாரிசு செய்தார்கள். அறிஞர் அண்ணா தன்னுடைய நட்பு செல்வாக்கினைப் பயன்படுத்தி செட்டியாரை ஒப்புக்கொள்ளச் செய்தார். இல்லாவிட்டால் "செவாலியே" நமக்கு மிஸ் ஆகியிருக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம்.

இதைப்போலவே தான், கமல். டீனேஜிலேயே நடிப்பு வாய்ப்பு கிடைக்காமல் வெறுத்துப்போய் நடன உதவியாளராக பணியாற்றினார். குழந்தை நட்சத்திரமாக வந்தவர் என்பதால் பெரிய நடிகர்களின் செல்லம்.

"நடிக்க வேண்டியதுதானே? உனக்குதான் நடிப்பு நல்லா வருமில்லே?" என்று எம்.ஜி.ஆர் ஒரு படப்பிடிப்பில் கமலிடம் கேட்டார்.

நடிப்பு வாய்ப்பு கேட்டுப் போனபோது கிடைத்த கசப்பான அனுபவங்களால் கமல் வெறுத்தநிலையில் சொன்னார். "ஓணான் மாதிரி இருக்கிறேன். என்னைப் போய் நடிகனா ஏற்றுக்கொள்வார்களா?"

"யார் சொன்னார்கள்? நீ அழகன். கண்டிப்பா மக்கள் உன்னை ஏற்றுக்கொள்வாங்க" என்று தைரியம் கொடுத்தார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரின் அந்த ஊக்கவார்த்தைகள் இல்லாமல் இருந்திருந்தால் ஒருவேளை கமல் இந்நேரம் ரகுராம் மாஸ்டர் மாதிரித்தான் ஆகியிருப்பார். இத்தனை தேசிய விருதுகளை தமிழுக்கு வாங்கித் தந்திருக்க மாட்டார்.

வாய்ப்புகளில்லாமல் சென்னை தெருக்களில் புல்லட்டில் சுற்றிக் கொண்டிருந்தாராம் விஜயகாந்த். புல்லட்டில் அமர்ந்திருந்த கட்டனின் கம்பீரத்தை கண்டுகொண்டவர் எஸ்.ஏ.சந்திரசேகர்தான். "நீதான்டா ஹீரோ" என்று கொத்திக்கொண்டு போனார்.


எல்லா ஸ்டார்களுமே யாரோ ஒருவருடைய ஊக்குவிப்பின் மூலமாகத்தான் நமக்கு கிடைத்திருக்கிறார்கள்.

# புயல்

▸ அதிகப்படியான வெப்பத்தினால் கடல்நீர் ஆவியாக மாறி மேல் நோக்கிச் சென்று குளிர்ச்சி அடைந்து மேகமாக மாறுகிறது.

▸ அதுபோல் வெப்பத்தினால் கடலின் மேல் பகுதியில் உள்ள காற்றும் லேசாகி மேல்நோக்கிச் செல்கிறது. அப்பொழுது காற்றின் வேகம் அதிகமாக இருந்தாலோ, அதிகப்படியான காற்று உள்ளிழுக்கப்பட்டாலோ வானில் ஒரு சுழற்சி ஏற்படுகிறது.

▸ இந்த சுழற்சி குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஆகும். இது மேலும் வலுவடைந்தால் புயலாக மாறும்.



# தலைமை ஒன்றுக்கு அதிகமாக இருக்கலாமா?

சிறுவர் கதை:

நிறைய தலைகள் கொண்ட பாம்பு ஒன்றும், ஒரே தலையும் நிறைய வால்களும் கொண்ட பாம்பு ஒன்றும் இருந்தன.

குளிர்காலம் வந்து விட்டால் போதும்! இந்தப் பாம்புகள் குளிருக்கு இதமாக ஏதாவது புற்றைத் தேடிச் செல்லும்.

பல தலைகள் உள்ள பாம்பு ஒரு புற்றில் நுழைய நினைக்கும் போதே, இன்னொரு தலை இன்னொரு புற்றைப் பார்க்கும். இன்னொரு தலை உடலை இழுக்கும். அது கடைசி வரை எந்தப் புற்றுக்குள்ளும் நுழையாமல் தவித்துக் கொண்டிருக்கும்.

ஆனால் பல வால்கள் கொண்ட பாம்போ ஒரு புற்றுக்குள் நுழையும். அதனுடைய பல வால்களும் வேகமாக உள்ளே போகும்.

இந்தக் கதை சாதாரணமானதாகத் தோன்றினாலும், இதில் அடங்கியிருக்கும் கருத்து மிக முக்கியமானது.

எந்த ஒரு அமைப்புக்கும் தலைமை ஒன்றாக இருக்க வேண்டும். அப்போதுதான் முடிவை உடனடியாக எடுக்க முடிவதுடன் அதை வெற்றியாகச் செயற்படுத்தவும் முடியும். பல தலைமைகள் இருந்தால் முடிவுகள் எடுப்பதில் ஒற்றுமையில்லாமல் எதையும் செயற்படுத்த முடியாமல் தவிக்க வேண்டியிருக்கும்.

பல எலிகள் கூடினால் புற்றெடுக்க முடியாது என்ற பழமொழியும் இதைத்தான் கூறுகிறது.

**(சின்ன முன்னுரை: எனக்கு இலக்கியம் பிடிக்கும் இலக்கியவாதிகளையும் பிடிக்கும். அந்த வாசக பேரன்பிலிருந்து பிறந்ததே இந்தக் கதை)**

# சோமாலியா கொள்ளையர்களும் தமிழ் இலக்கியமும்

**– என்.சந்தோஷ் 1**

கப்பல் சோமாலியா கடல் எல்லையை தாண்டும் வரை பயணிகள் உஷாராக இருக்கும் படி சிப்பந்திகள் சொன்ன போது ஜெய்கிருஷ்ணன் சுப்ரமணியனுக்கு முதலில் சிரிப்பு தான் வந்தது. சென்னையில் தன் நண்பன் சந்தோஷ் வாங்கி கொடுத்த தமிழின் முக்கியமான எழுத்தாளர்களின் கனமான புத்தகங்களைத் தவிர அவனிடம் சொல்லிக்கொள்ளும் படி எந்த உயர்தர வஸ்துவும் இல்லை. சோமாலிய கொள்ளையர்கள் கப்பலுக்குள் புகுந்தால் கூட இப்புத்தகங்களை தூக்கி சுமக்க கஷ்டப்பட்டாவது தன்னை விட்டுவிடுவார்கள் என்று கற்பனை செய்து கொண்டான். எப்படியோ சிறு தோணிகள் மூலம் கொள்ளையர்கள் கப்பலுக்குள் புகுந்து விட்டார்கள் என அறிந்த போது கூட அவன் அசரவில்லை. ஆனால் சில கொள்ளையர்கள் சுற்றி வளைத்து இவனை பிடித்துக்கொண்டு இவனுடைய பெரிய பொதியைப் பார்த்து என்ன இது என்று கேட்ட போது கூட "புக்ஸ் தமிழ் புக்ஸ்" என்றான் மிதப்பாக. தலையில் "நங்"கென்று அடி விழுந்தது. பிறகு நடந்தது எல்லாம் அவனுக்கு ஹெராயின் போதையில் வரும் ட்ரிப்பிங் போல சுருள் சுருளாக பலவண்ணத்தில் உள்ளுக்குள் ஒரு மொடேர்ன் ஆர்ட்டாக நெளிந்து நெளிந்து சென்று கொண்டிருந்தது. கண் விழித்து பார்த்தால் ஏதோ ஒரு தகரக்கொட்டகையில் ஒரு மர வாங்கிலில் படுத்திருந்தான்.

சுற்றிலும் கறுத்த தேகங்கள் கொண்ட சோமாலிய கொள்ளையர்கள் அழுக்கான இராணுவச் சீருடையில் ஏதேதோ செய்து கொண்டிருந்தார்கள். இவனுக்கு நினைவு திரும்பியதைக் கண்டுகொண்ட அவர்களில் தலைவன் போல இருந்தவன் இவன் அருகில் வந்து இவன் தாடையைப் பிடித்து தூக்கி "இந்தியாவி லிருந்து வருகிறாய் என்று தெரியும். அங்கே எங்கிருந்து வருகிறாய்?" என்று சுத்த தமிழில் கேக்கா விட்டாலும் அவன் பேசிய ஆங்கிலத்தை இப்படி மனதிற்குள் மொழி பெயர்த்துக் கொண்டான் ஜெய். "தமிழ் நாடு" "இதெல்லாம் என்ன" "புக்ஸ்" "அது தெரியுது மவனே இதெல்லாம் என்ன புக்ஸ்" என்றான்.

"இதெல்லாம் இலக்கிய புத்தகங்கள். குண்டு குண்டா இருக் குதே அதெல்லாம் நாவல்கள். ஒல்லியா இருக்கிறது எல்லாம் கவிதைப் புத்தகங்கள்" என்றான்.

"ஓ நாவல். அது சரி" என்று விட்டு அவிழ்ந்து கிடந்த புத்தகக் கட்டில் ஒன்றை சுட்டி ஒல்லியான ஒரு கொள்ளைக்காரனிடம் தூக்க சொல்லுகிறான். அவன் அந்த புத்தகத்தை தூக்க முயற்சி செய்து முடியாமல் இன்னொருவனை ஒரு கை பிடிக்க சொல்லி இருவருமாக தூக்கி கொண்டு வந்து காட்டுகிறார்கள் "இது என்ன புத்தகம்" என்கிறான் தலைவன். "இது. விஷ்ணுபுரம்" என்கிறான் ஜெய். இரண்டு கொள்ளையர்களும் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு நிற்க தலைவன் சில பக்கங்களைப் புரட்டி விட்டு ஜெய்யை நோக்கி திரும்பி கேட்டான் "இது எத்தனை பேர் சேர்ந்து எழுதியது"

"எத்தனை பேரா" ஒரே ஆள் ஒரே ஆள் எழுதியது தான்" என்கிறான். அந்த ஒல்லியான ஆள் கடுப்புடன் "இத ஒரே ஆளா தூக்க முடியல ஒரு ஆள் எழுதினதா, என்ன விளையாடு-றியா" என்கிறான். அவன் இடுப்பிலிருந்த துப்பாக்கியை பார்த்து லேசான பீதியுடன் ஜெய்" நல்ல வேளை அசோகவனம் இன்னும் வரல" என்று தனக்குள் முணு முணுத்து விட்டு "சத்தியமா சொல்கிறேன் ஒரே ஆள் தான். அவர் பேரு ஜெயமோகன். இங்கே நமீபியாவுக்கெல்லாம் கூட வந்திருக்கிறார்... தெரிஞ்சவங்க யாராவது இருந்தா விசாரிச்சுப் பாருங்க" என்றான்.



கூட்டத்திலிருந்து இன்னொரு கொள்ளையன் மெல்ல நடந்து வந்து சாவகாசமாக புத்தகத்தின் பின்னட்டையை திருப்பிப் பார்த்து விட்டு தலைவனிடம் சொன்னான் "பாஸ். இவரைப்பற்றி நான் கேள் விப்பட்டிருக்கிறேன்.. நம்ம சினுவா ஆச்சிபேய கூட இவரு நிராகரிச்சு தான் எழுதியிருக்காரு" என்றான். ஜெய்க்கு இந்தத் தகவலே புதுசாக இருந்தது. "நிராகரிச்சு என்றால்?" என்றான் தலைவன். "அது வந்து பாஸ் இப்போ நம்மிடம் மாட்டிய பயணிகளில் யாராவது பிரயோசனம் இல்லை என்று தெரிந்தால் போட்டுத் தள்ளுறோம் இல்லையா அது மாதிரி தான்" என்றான். "ஓ..." என்றபடி தலைவன் ஜெய்கிருஷ்ணனை பார்த்து திரும்பி "அடுத்த கப்பல் எப்போ வருமோ என்னமோ அது வரைக்கும் எங்களுக்கும் பொழுது போகணும் தம்பி. நீ என்ன பண்ணு இந்த நாவல எங்களுக்குப் படிச்சுக் காட்டு" என்றான். ஜெய் கதறி விட்டான். "ஐயா நான் இதை மும்பையில் கப்பல் ஏறும் போது படிக்க ஆரம்பிச்சது. ஸ்ரீபாதமே இன்னும் தாண்ட முடியல. முழுக்க படிச்சு காட்டுவதானால் ஒரே கப்பல் ஏழு முறை சோமாலியாவ கடந்து போனாலும் நீங்க மிஸ் பண்ணிடுவீங்க. அவ்வளவு நாளா-கும். விட்டுடுங்க" என்றான்.

(தொடரும்)

▶ இந்த சுழற்சியின் நடுப்பகுதியை புயலின் கண் என்று கூறுவார்கள். இந்த கண்பகுதியைச் சுற்றி உள்ள காற்று வேகமாக சக்கரம்போல் சுழலும்.

▶ இப்படிச் சுற்றும் காற்றின் வேகம் மணிக்கு 74 கி.மீ. தாண்டினால் அது வலுப்பெற்ற புயல் ஆகும். வேகம் குறைவாக இருந்தால் காற்றழுத்த தாழ்வு நிலை.

▶ வேகமாக சக்கரமாகச் சுழலும்போது அப்படியே நகரத் தொடங்கும். இது கடலில் சற்று வெப்பமான பகுதியை அடைந்தால் அல்லது நிலப்பகுதியை நெருங்கும்பொழுது ஏற்படும் மாற்றங்களால் மேகம் மழையாகப் பெய்கிறது. காற்று சூறாவளியாக வீசுகிறது.


▶ புயலின் வேகம் 6 நிலைகளில் கணக்கிடப்படுகிறது. முதல் நிலையில் காற்றின் வேகம் மணிக்கு 51 கி.மீ. இதனால் பெரிய சேதம் ஏற்படாது. இரண்டாம் நிலை 6[illegible] கி.மீ., மூன்றாம் நிலை 87 கி.மீ., நான்காம் நிலை 117 கி.மீ., ஐந்தாம் நிலை 221 கி.மீ., ஆறாம் நிலை என்பது மணிக்கு - 250 கி.மீ. ஆகும்.

▶ காற்றின் வேகத்தையும், மேகத்தின் விஸ்தீரணத்தை அதாவது மொத்த பரப்பளவைப் பொறுத்து அதன் பலமும், அதனால் ஏற்படும் சேதமும் இருக்கும்.



# தீராத மர்மமும் தேறாத ஆய்வுகளும்

**– க்ளோப் ஜாமூன் கட்டுரையிலிருந்து.**




மொஹம்மத் யாசிர் அப்துல் ரஹ்மான் அப்துல் ரவூ.'.ப் அரா.'.பத் அல் கத்வா என்னும் யாசிர் அரா.'.பத், நவம்பர் 11, 2004 அன்று தமது 75ஆவது வயதில் இறந்தார். முன்னதாக உடல்நலக் குறைவு ஏற்பட்டு, சில நாள்கள் அவர் கோமா நிலையில் இருந்தார்.

பாலஸ்தீனத்து அரேபியர்கள் ஒருத்தர் விடாமல் திரண்டு வந்து இறுதி அஞ்சலி செலுத்தித் தங்கள் தனிப்பெரும் தலைவரை நல்லடக்கம் செய்தார்கள்.

அடுத்த வருஷம் செப்டெம்பரில் அரா.'.பத் மறைவில் ஏதோ மர்மம் இருக்கிறது என்கிற வதந்தி மிகத் தீவிரமாகப் பரவத் தொடங்கியது. இஸ்ரேலியர்கள், அவர் பால்வினை நோயால் இறந்தார் என்றொரு வதந்தியைப் பரப்ப ஆரம்பித்தார்கள்.

கொதித்துப் போன பாலஸ்தீனியர்கள் அரா.'.பத்தின் மரணம் குறித்த உண்மைத் தகவல்களை அறிவியல்பூர்வமாக உலகுக்கு நிரூபிக்க விரும்பினார்கள். அரா.'.பத்தின் பிரத்தியேக மருத்துவர் அஷ்ர.'.ப் அல் குர்தியும் இன்னொரு மருத்துவரும் மேற்கொண்ட ஆராய்ச்சியின் இறுதியில் யாசிர் அரா.'.பத் தோலியம் என்னும் ஆட்கொல்லி விஷம் வைத்து கொல்லப்பட்டிருக்கிறார் என்று சொல்லப்பட்டது.

யாசிர் அரா.'.பத்தை இஸ்ரேலியர்கள்தாம் விஷம் வைத்துக் கொன்றுவிட்டார்கள் என்று உலகம் முழுதும் பேச ஆரம்பித்தார்கள். நோய்வாய்ப்பட்ட தமது கடைசிக் காலத்தில் அரா.'.பத் பாரிஸில் உள்ள ஒரு மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். அவரது மனைவி சுஹா அரா.'.பத் ஒரு பிரெஞ்ச் பெண்மணி என்பது இதன் காரணம்.

அரா.'.பத்தின் மரணத்தில் எழுந்த சந்தேகங்களின் விளைவாக திருமதி சுஹா அரா.'.பத் தமது சொந்த முயற்சியில் பிரெஞ்ச் ஆய்வாளர்களிடம் வழக்கைச் சொல்லி பொறுப்பை ஒப்படைத்து உண்மையைக் கண்டறிந்து சொல்லக் கேட்டுக்கொண்டார்.

வந்த பதில் பொலோனியம் 210 என்னும் கதிரியக்க சங்கதி அவர் உடலுக்குள் செலுத்தப்பட்டு இறந்திருக்கிறார் என்று சொன்னது. ஆனாலும் இறுதி அறிக்கை அளித்த மருத்துவமனையானது, அரா.'.பத் இயற்கையான முறையில்தான் மரணமடைந்தார் என்று எழுதிக் கொடுத்துவிட்டது. இந்தக் குழப்படி அறிக்கைகள், முடிவு வெளியீடுகளில் என்னமோ உள்குத்து இருக்கிறது என்று நினைத்த அல் ஜசீரா, அரா.'.பத்தின் மரணத்துக்கு உண்மையான காரணம் என்னவென்று கண்டுபிடிக்கும் புலனாய்வில் இறங்கியது.

ஒன்பது மாதப் புலனாய்வு. ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், மருத்துவ வல்லுநர்களின் உதவியுடன் அரா.'.பத்தின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட செல்களை ஆராய்ந்து ஜூலை 4, 2012 அன்று தனது முடிவைத் தெரிவித்தது. சந்தேகமில்லை. பொலோனியம் அவர் உடலுக்குள் செலுத்தப்பட்டிருக்கிறது. உணவில் கலந்தோ அல்லது வேறெப்படியோ அரா.'.பத்தின் மரணத்துக்கு அதுதான் காரணம்.

இடையே இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஒரு ரஷ்யக் குழுவினரும் இதே முடிவுக்குத்தான் வந்து சேர்ந்தார்கள். கொடுக்கப்பட்ட விஷம், பொலோனியம் இருநூற்றுப் பத்துதான். அதில் சந்தேகமில்லை.

சென்ற வருடம் இந்த ஆராய்ச்சிகள் அனைத்தும் ஒருவாறு ஓய்ந்து அரபுலகமே அடுத்த கவலையைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பிவிட்ட நிலையில், இன்றைக்கு மீண்டும் அரா.'.பத்தின் மரணம் பேசுபொருளாகியிருக்கிறது.

மீண்டும் பிரெஞ்ச் ஆராய்ச்சியாளர்கள். இல்லை. பொலோனியமெல்லாம் கொடுக்கப்பட்டதற்கான தடயமே இல்லை. அரா.'.பத் இயற்கையாகத்தான் இறந்திருக்கிறார். செய்திகளைத் திரிக்க வேண்டாம் என்றிருக்கிறார்கள்.

இந்த ஆய்வுகளும் முடிவுகளும் அரா.'.பத் விஷயத்தில் இனி அடிக்கடி வரத்தான் போகின்றன. காலம் உள்ள அளவும் அவரது பெயரை நினைவுகூர அவரது மரணத்தைப் பயன்படுத்த முடிவு செய்துவிட்டார்கள் போலிருக்கிறது.

வாழ்ந்த காலத்தில் செய்த செயல்களை மறைக்கவும் மறக்கவைக்கவும் இதனைக் காட்டிலும் உன்னதமான வழி-முறை வேறில்லை என்கிற முடிவுக்கு இனி நாம் வரலாம்.




# நிகழ்வுகளின் பதிவுகள்....


பூநகரி மத்திய கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் பூவினை சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் தென்மராட்சி வலய ஆசிரிய ஆலோசகர் மதிப்பீட்டுரை நிகழ்த்துவதையும், சஞ்சிகை வெளியீட்டு வைக்கப்படுவதையும் காணலாம். (112)






சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் ஒளிவிழா கடந்த புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், பண்டத்தரிப்பு பரிஷ் பங்குத்தந்தை வண. ஒயின் பிரான்சிஸ் அடிகளார் மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (48)




தென்மராட்சி லயன்ஸ் கழக பிரதிநிதியால் கச்சாய் பொது நூலகத்திற்கான ஒரு தொகுதி நூல்கள் நூலகரிடம் வழங்கப்படுவதைக் காணலாம்.


கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற போது அதிபர் கணேசன் உரையாற்றுவதையும் அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் கலந்துகொண்ட பிரதிநிதிகளையும் காணலாம். (29)

வேலணை மத்திய கல்லூரி தமிழ்ச் சங்கம் நடாத்திய தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டுவிழா கடந்த புதன்கிழமை கல்லூரியில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் மங்கள விளக்கேற்றுவதையும் மயில் நடன நிகழ்வையும் காணலாம். (90,48)





வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், நிறுவனத் தலைவர் பி.ரகுநாதன் உரையாற்றுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (109)

# மூத்த பிரஜைகள் அமைப்பின் முதியோர் கௌரவிப்பு விழா



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள ஊற்றுப்புலம் கிராமத்தின் மூத்த பிரஜைகள் அமைப்பின் முதியோர் கௌரவிப்பும், ஒன்றுகூடல் நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்றது.

ஊற்றுப்புலம் சேவை நிலையத்தில் ஊற்றுப்புலம் மூத்த பிரஜைகள் அமைப்பின் தலைவர் நா.சின்னையா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரும், ஊற்றுப்புலம் கிராமத்தின் முன்னாள் திட்ட இணைப்பாளருமாகிய நா.வை. குகராசா, சோ.ஆ நிறுவனத்தின் கிளிநொச்சி திட்ட முகாமையாளராகிய ஜென்ஸ்ரன் தயாபரன் நைல்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி சண்முகம் காந்திமதி, ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலையின் முதல்வர் ம.உமாசங்கர், கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவையின் தலைவர் மா.புவனேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கிராமத்தின் வளர்ச்சிக்காகப்பாடுபட்ட முதியோர்கள் கௌரவிக்கப்பட்டனர். (90)

# பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சினால் கீழ் வரும் பதவிகளுக்காக தகுதிபெற்ற இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொலைபேசி இயக்குநர் iii கவனிப்பாளர் ஆண், பெண் சமையல்காரர் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதுடன் கல்வித்தகைமையாக க.பொ.த. (சா/த) தரப் பரீட்சையில் இரு முறைக்கு மேற்படாத வாறு ஆகக்குறைந்தது இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இதற்கு வயதெல்லையாக 18 முதல் 45 வயதாகும்.

இப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு எழுத்துப் பரீட்சை மூலம் இடம்பெறும் எழுத்துப்பரீட்சை வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடைபெறும்.

விண்ணப்பதாரிகள் 04.12.2013 திகதிய தினகரன் பத்திரிகையில் வெளிவந்துள்ள விண்ணப்பமாதிரி படிவத்துக்கமைய ஏ-4 அளவு தாளில் இரு பக்கங்களையும் பாவித்து முதல் பக்கத்தில் 1முதல் 9வரையிலும் இரண்டாம் பக்கத்தில் 10 முதல் 13 வரையிலும் வரும்படியாக தமது கையெழுத்திலேயே தயாரித்து பூர்த்தி செய்யவேண்டும்.

விண்ணப்பிக்கும் கடித, உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், பரீட்சை நகரம் மற்றும், நகர இலக்கம் என்பன கட்டாயம் குறிப்பிட வேண்டும் அத்துடன் கொழும்பு மத்திய அஞ்சல் அலுவலகத்தில் பெறக்கூடிய காசுக்கட்டளையொன்றின் மூலம் 300 ரூபா பரீட்சைக் கட்டணமாக செலுத்தவேண்டும்.விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், சுகாதார அமைச்சு, சுவசிரியாய 385, பூஜ்யவிமலவங்ஸ ஹிமி மாவத்தை கொழும்பு -10 என்று முகவரிக்கு அனுப்பிக்கவேண்டும்.


இந்துநெறி காக்க

## "ஓம் நமசிவாய" ஆன்மிக வங்கியில் முதலீடு செய்யுங்கள்



உலகளாவிய ரீதியில் வாழும் இந்துக்கள் அனைவரும் உணர்வுபூர்வமாக ஒன்று சேர்ந்து ஓம்நமசிவாய என்னும் திருநாமம் கொண்ட ஆன்மீக வங்கியில் ஓம் நமசிவாய சிவ புண்ணிய பூமியாகிய இலங்கை மணித்திருநாட்டில் இந்து சமயத்திற்கும் இந்து மக்களுக்கும் ஏற்பட்டுள்ள நலிவுற்ற தன்மையைப் போக்கி வலுச்சேர்ப்பதற்கு ஓம் நமசிவாய என்னும் மந்திரம் தேவைப்படுகின்றது. நலக்குறைவாக உள்ள மனிதனுக்கு ஆரோக்கியத்துடன் வாழ சத்துணவுகள் தேவைப்படுகின்றன. வலுக்குன்றி வரும் எமது இந்து நெறிக்கு சிவகவசம் இடப்படல் வேண்டும்அதற்கு ஓம் நமசிவாய என்னும் மந்திரம் முதலீடு செய்யப்படவேண்டும். அதற்கு உலகெங்கும் பரந்து வாழும் இந்துமக்கள் ஒவ்வொருத்தரும் தங்களது மனப்பூர்வமான பங்களிப்பாக ஓம் நமசிவாய என்னும் மந்திரத்தினை எழுதி இந்த "ஓம் நமசிவாய" என்னும் ஆன்மீக வங்கியில் முதலீடு செய்ய அழைக்கின்றோம்.

இந்துக்களின் புனிதமான திருநாளாக கருதப்படும் மார்கழி மாத திருவெம்பாவை விரத நாட்களில் இன்று முதல் 18.12.2013 வரை ஓம் நமசிவாய என்னும் மந்திரத்தினை இயன்றவரை எழுதி எழுதியவற்றின் எண்ணிக்கையையும் குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்கு 25.12.2013 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும் வகையில் அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம். நேரடியாகக் கையளிக்க விரும்புவோர் எமது அமைப்பின் பிரதேச பிரதிநிதிகளாகத் திகழும் சிவாச்சாரியார்களிடம் கையளிக்கலாம். வெளிநாடுகளில் வாழும் இந்துக்கள் மந்திரத்தினை எழுதி ஸ்கான் செய்து jaffnapriest@gmail.com என்னும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம். 13.01.2014 திங்கட்கிழமை பிரதோஷ விரத புண்ணிய காலத்தில் வண்ணை சிவாலயத்தில் இருந்து ஊர்வலமாக கீரிமலை நகுலேஸ்வராலயத்திற்கு மந்திர வங்கி கொண்டு சென்று அங்கு சிவார்ப்பணமாக்கப்படும்.

யாழ். மாவட்ட மக்கள் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

*"ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி"*
*சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,*
*பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.*

தென்மராட்சி வாழ். மக்கள் நேரடியாக சேர்ப்பிக்கும் சிவசன்னிதானம் வாரியப்பர் புராதன சிவன்கோவில், சாவகச்சேரி.

இப்புனிதமான கைங்கரியத்தில் ஆலய அறங்காவலர்கள் அரச, தனியார் உத்தியோகத்தர்கள் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன சமூகத்தினர்கள் மற்றும் இந்து அமைப்புக்கள் தாங்கள் அனைவரும் முழுமனத்துடன் ஈடுபடுவதோடு சைவமக்கள் அனைவரையும் இப்பணியில் ஈடுபடுத்தி ஆன்மீக பலத்தினைப் பெருக்கிடுங்கள்.

"ஒவ்வொருவரும் ஓம் நமசிவாய எனும் மந்திரத்தை குறைந்தது 1008முறை எழுதி சிவார்ப்பணமாக சமர்ப்பிப்பதன் மூலம் மன அமைதியும், நல்வாழ்வும், சிவனருளும், உயர்வும் பெறுவோமாக"

**கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்**
**வித்துவசபை சிவாச்சாரியார்**
**குருமார் ஒன்றியம்.**




# வேலை வாய்ப்புச் செய்திகள்

துறைமுகத்திலிருந்து தூரத்திற்கு செல்ல அனுபவமுள்ள அனுபவமற்ற வயது எல்லையின்றி கண்டெய்னர் உதவியாளர், சாரதிகள் மேலதிக சம்பளத்திற்கு தேவை. தொடர்புக்கு 0373970039

---

பாரம் ஏற்றியிறக்கக்கூடிய வேலையாட்கள் தேவை. தங்குமிடவசதிகள் உண்டு. அத்தோடு மாதம் 27.500 ரூபாய்க்கு மேல் உழைக்கலாம் தொடர்புகளுக்கு 0715324584, 0714376165

---

3பேர் உள்ள சிறிய குடும்பத்துக்கு வீட்டு வேலைக்கு பணிப்பெண் ஒருவர் தேவை. நல்ல சம்பளம் சாப்பாடு வழங்கப்படும். தொடர்புக்கு 0776777550, 0759809709

---

Supply மற்றும் Teamaker வேலைக்கும் ஆட்கள் தேவை. தங்குமிட வசதி, உணவு வழங்கப்படும் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் தொடர்புக்கு 0785280195, 0725816075.

---

O/L படித்த பெண்பிள்ளை ஒருவர் தேவை. லேபல் அடிப்பதற்கு சம்பளம் 15.000 தொடர்புக்கு 0717300326.

---

கட்டிட நிர்மாணத் துறையில் வேலை செய்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு சகல வசதிகளும் உண்டு வருகை தரும் நாளிலே வேலை.தொடர்புக்கு 0771913204, 0778430179.

---

இலங்கையில் முன்னணி வங்கியிள் காப்புறுதி நிறுவன மொன்றில் கொழும்புக்கிளையில் தொழில் புரிவதற்கான சந்தர்ப்பம் க.பொ.(சா/த) தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் அழைக்கவும் தொடர்புக்கு 0758013903, 0778141400.

---

சிறந்த அனுபவமுள்ள ஆங்கில, தமிழ் சிங்கள மொழியில் type Setting செய்வதற்கு ஆட்கள் தேவை தொடர்புக்கு 0777904143.

---

எங்கள் நிறுவனத்திற்கு உதவியாளர்கள் (21,000/=) பார்சல் செய்யக்கூடியவர்கள் (15,000/=) உடன் தேவை. எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படும் 0773298297, 0112822877.

---

முச்சக்கரவண்டி சேர்விஸ் செய்வதற்காக பாஸ்மார்கள் மற்றும் உதவியாளர்கள் தேவை. தொடர்புக்கு 0752844961.

---

சிரமப்பட்டு வேலை செய்யக்கூடியவேலையாட்கள் தேவை. சுமைதூக்க இறக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலதிக நேரக் கொடுப்பனவுகள், உணவு தங்குமிட வசதியுண்டு. தொடர்புக்கு 0777523141.

---

திருகோணமலையில் அமைந்துள்ள எமது காரியாலயத்திற்கு வயது 18-28 இடைப்பட்ட A/L படித்த எழுதுவினைஞர் பெண்தேவை தொடர்புக்கு 0777999159.

---

மரக்கறி வெட்ட, இடியப்பம் அவிப்பதற்கு தம்பதியினர் அல்லது ஆண் ஒருவர் தேவை. உணவு தங்குமிடம் இலவசம் தொடர்புக்கு 0786106990.

---

சம்பளம் 18,000 உணவு தங்குமிடம் இலவசம் பல தொழில்களுக்கு 8ஆம் ஆண்டு சித்தியடைந்த அனைவருக்கும் தொழில், வருகை தரும் நாளே தொழில் 0772267179.

---

சர்வதேச முன்னணி நிறுவனத்திற்கு புதிய கிளைகள் 4இற்கு 18 வயதிற்கு மேல் O/L தோற்றிய 21 பேர் வீதம் பயிற்சியளித்து இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். பயிற்சி, தங்குமிடம் இலவசம் தொடர்புக்கு 0713546879.

---

கூடிய சம்பளம் நிரந்தர வேலைவாய்ப்பு நாடு பூராகவும் அமைந்துள்ள நிறுவனத்துக்கு வேலையாட்கள் தேவை தொடர்புக்கு 0711388244, 0727957957.

# பிரித்தானிய குடிவரவுச்சட்டம் தவறாகப்பயன்படுத்தப்படுகிறது

## இலங்கையர்களே முன்னணியில்

(கொழும்பு)

பிரித்தானியாவின் குடிவரவுக்கொள்கையை தவறாகப் பயன்படுத்துபவர்களில் இலங்கையர்களே அதிகம் என்று பிரித்தானிய அரசு அறிவித்துள்ளது.

அதிகளவான இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் மாணவர் அல்லது சுற்றுலா வீசாவில் நாட்டுக்குள் பிரவேசித்தவர்கள் என பிரித்தானியா அறிவித்துள்ளது.

சுற்றுலா அல்லது மாணவர் வீசா அடிப்படையில் நாட்டுக்குள் பிரவேசித்த அதிகளவான இலங்கையர்களே பின்னர் புகலிடம் கோரி விண்ணப்பிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டு காலப் பகுதியில் இலங்கையைச் சேர்ந்த 7445 புகலிட விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி நாட்டுக்குள் பிரவேசித்து பின்னர் புகலிடம் கோருவதாக பிரித்தானிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

1951ஆம் ஆண்டு உலக புகலிடக் கோரிக்கையாளர் பிரகடனத்திற்கு அமைவாக பிரித்தானியா நடவடிக்கை எடுக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இதனால் ஏற்கனவே பல்வேறு வழிகளினால் பிரித்தானியாவுக்குள் நுழைந்து அங்கு வசித்துவரும் பலரின் புகலிடஅனுமதிக்கான கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி பிக்னெல் மைதானத்திலும், அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும், வலி.மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர்களால் பாதீனியங்களை அகற்றும் நடவடிக்கைமுன்னெடுக்கப்படுவதைக் காணலாம். (48)

# யுத்தத்திற்குப்பிந்திய அபிவிருத்தி சர்வதேசத்துக்கு எடுத்துரைப்பு



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரையை செயற்படுத்துதல் மற்றும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகிய இருவரும் இணைந்து நேற்று முன்தினம் இந்த விளக்கத்தை அளித்துள்ளனர்.

அமைச்சர் பீரிஸ் விளக்கமளிக்கும் போது வடபகுதியில் கணக்கெடுப்புக்கள் தொடர்ந்தும் செயற்படுத்தப்படுகின்றன எனவும் காணி ஆணையாளரின் கண்காணிப்பின் கீழ் காணிப்பிரச்சினைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் குறிப்பிட்டார். மேலும் உத்தியோகபூர்வமாக முன்னெடுத்துச் செல்லப்படும் வேலைத்திட்டங்கள் பற்றியும் விளக்கமளித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரையை செயற்படுத்துதல் தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு விரிவான முறையில் விளக்கமளித்தார்.

# உயர்தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

(யாழ். நிருபர்)

ஆகஸ்ட் 2012 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் முதல் அமர்வில் சித்தியடைந்து 2013/14ஆம் ஆண்டுகளில் தேசிய பல்கலைக் கழகங்களில் முழுநேரப் பட்டக் கல்வியைத் தொடர்வதற்குத் தகுதி பெற்றுள்ள மாணவர்களுக்கு தந்தை பீட்டர் பிள்ளை ஞாபகார்த்த புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மருத்துவம், பொறியியல், விவசாயம், மிருக வைத்தியம், பல்வைத்தியம், அளவையியல் கட்டடக்கலை, சுற்றுப்புற விஞ்ஞானம், உயிரியல், பௌதிகவியல், நெசவு மற்றும் ஆடைத் தொழில்நுட்பம், கணனி, விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், உணவு மற்றும் ஊட்டச்சத்து ஆகிய பாடநெறிகளில் ஒன்றினைக் கற்க தேசிய பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறும் மாணவர்களுக்கு இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

ஆகக்குறைந்த Z புள்ளி 1.6000 மற்றும் பொது அறிவுப் பரீட்சையில் சாதாரண சித்தி பெற்றவர்களும், மாகாணத்தில் அதிக புள்ளிகள் பெற்ற பத்து மாணவர்களுள் ஒருவராயுமுள்ளவர்கள் இப்புலமைப் பரிசில் பெறத்தகுதியுடையவராவர்.

விண்ணப்பப் படிவங்களைப் பெற சுயமுகவரி எழுதி முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையினை செயலாளர், தந்தை பீட்டர்பிள்ளை ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதியம், 160/24, கிரிமண்டல மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# திறன்விருத்திப் பயிற்சி முல்லையில் விசேடதிட்டம்

(யாழ்.நிருபர்)


முல்லைத்தீவு சமுதாய அபிவிருத்தி நிறுவனம் CDO க. பொ. த.சாதாரணதரம் வரை கற்ற மாணவர்களிடமிருந்து திறன் விருத்திப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி ஆங்கில மொழித் தேர்ச்சித்திறன் அடிப்படைக் கணனிக்கல்வி ஆகிய கற்கை நெறிகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

சுயதொழில் தேடிக்கொள்ள விரும்பும் அனைவரும் இப்பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டு பயன்பெறமுடியும், பயிற்சிநெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன் திட்டப்பணிப்பாளர் சமுதாய அபிவிருத்தி நிறுவனம், செம்மலை, அளம்பில், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர். (10)

# பரமர் சங்கமம்



கண்ணாடி மாளிகைக்குள் இருந்து கொண்டு கல்லெறியக்கூடாது எண்டால் எனன அர்த்தம்? இதனைச் சொல்லி இருபபவர் எங்கட ஜனாதிபதி. ஆருக் கெண்டால் பொதுநலவாய நாடுகள் எனச் சொல்லப்படும் 54 நாடுகளையும் சூரியன் உதிக்காமல் செய்த பிரிட்டிஷ் நாட்டுப் பிரதம மந்திரி டேவிட் கமரூனுக்கே!

பாம்பின் காலைப் பாம்பறியும். எண்டும் தமிழில் பழமொழி ஒன்றுண்டு. பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடப்பதை ஆரம்பத்தில் இருந்து எதிர்த்துவந்த நாடு கனடா. இந்தியா மதில மேல் பூனையாக இருந்து வந்தது. ஆயினும் இந்தியப் பிரதமர் மாநாட்டில் கலந்து கொள்ளாமலே இருந்தும் விட்டார்..

54 பொதுநலவாய நாடுகளில் 37 நாடுகள் கலந்துகொள்ள இருப்பதாக எதிர்பார்க்கப்பட்டபோதும் 21 நாட்டுத் தலைவர்களே கலந்துகொண்டதாகவும் இறுதி முடிவு தெரிவிக்கிறது. பொதுநலவாய நாடுகளின் கட்டுமான ஒழுங்கின்படி இலங்கை மனித உரிமைமீறலில் இன்னமும் ஈடுபட்டு வருவதோடு 2009 இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட புலிகளுடனான இறுதிப் போரில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்தமைக்கான விசாரணையைச் செய்யாமல் இருப்பதும் விரோதமாகும்.

அதனைச் செய்து முடிக்கும்படி இந்தியா வலியுறுத்தி வந்த போதும், இலங்கை செய்யாமல் கடத்தி வந்ததாலேயே இந்தியா, கனடா, மொரிசியஸ் எனப் பல நாடுகள் பொதுநலவாய மாநாடடில் கலந்துகொள்ளாமல் இருக்கப் புறக்கணித்து வந்தன. அவ்வேளை டேவிட் கமரூன் அந்நாடுகளுக்குச் சொன்னதென்ன?

மாநாட்டில் அதனைச் சொல்லி இலங்கையை வழிப்படுத்துவோம் என்பதைச் சர்வதேசமுமே அறியும். இந்நிலையில் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலியரம்புக்வெல கெமரூனை அழைத்தது எங்கட ஜனாதிபதியிடம் கேள்வி கேட்க அல்ல என்றதும் ஜனாதிப்தி திருவாய் மலர்கையில் கமரூன் கதைப்பது அவரது ஜனநாயக உரிமை. கண்ணாடி மாளிகைக்குள் இருந்து கொண்டு கல்லெறியக்கூடாது என்று சொன்னது தான் உதைக்குது.

புலிகளை அழித்தொழிக்க ஒன்றிணைந்த நாடுகளில் அமெரிக்கா, பிரிட்டனும் அடங்கும். ஆயினும் இறுதிப்போருக்கு முன்னதாகவே மேற்படி நாடுகள் விலகி வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றன. இந்தியாவே இறுதிவரை நின்று அழித்தொழிப்பில் இலங்கையுடன் தோளோடு தோள் நின்றது. அந்தப் பாவ விமோசனத்துக்காகவே 50 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கவும், வடபகுதிக்கான ரயில் போக்குவரத்தை அமைக்கவும் சிலுவையைத் தூக்கியது. ஆயினும் மனச்சாட்சி உறுத்தியதாலே மாநாட்டில் கலந்துகொள்ளாமல் விடவும் நேர்ந்தது.

பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் சொன்னதன் படியே இலங்கை வந்து வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்டதுடன் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இலங்கைத் தலைவருக்கு புத்தியும் சொன்னார். மூடனுக்குப் புத்தி சொன்னால் கேடுவிளையும். என்பதற்கேற்ப கெமரூனுக்கே பந்தைத் திருப்பி அடித்துள்ளார் ஜனாதிபதி.

கமரூன் நாடு திரும்பிய வேகத்திலேயே எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் எங்கட கண்ணாடி மாளிகைகளுக்கே ஆபத்து வரும்போல கிடக்கல்லே என்ன நான் சொல்லுறே...

# மகர ஜோதி பெருவிழா

(யாழ்.நிருபர்)

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய வருடாந்த மகர ஜோதிப் பெருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிமுதல் ஐயப்பசுவாமிகள் விசேட அபிஷேகம் நடைபெற்று காலை 8 மணிக்கு மகரஜோதி பதினெட்டாம்படி பூசையும் மு.ப. 10 மணிக்கு சரண கோஷம் பஜனையும் இடம்பெறும்.

இணுவில் காயத்திரி பீடம் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தாணுமகா தேவ சிவாச்சாரியார் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெறும்.

இவ்விழாவில் குருசுவாமிகள், மாலை அணியப்பெற்ற ஐயப்பன் சுவாமிமார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஆலய அறங்காவலர் மகாராணி சோமசேகரம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

# "ஞானச்சுடர்" வெளியீட்டு விழா

(யாழ்.நிருபர்)

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் 'ஞானசுடர்' மார்கழி மாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் குப்பிளான் பிரதேச கிராமசேவை அலுவலர் சோ.பரமநாதன் ஞானச்சுடர் சஞ்சிகையை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

நூல் மதிப்பீட்டுரையை தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்த மூர்த்தி நிகழ்த்துவார். (10)

# இலத்திரனியல் அடையாளஅட்டை கிராம அலுவலர்களுக்கு பயிற்சி

(யாழ். நிருபர்)

இலங்கையில் 15வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இலத்திரனியல் அடையாள அட்டையினை வழங்குவதற்கு ஆட்பதிவு திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளர் ஆர்.எம்.என். சரத்குமார் நாட்டில் உள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் தகவல்களை சேகரிக்குமாறு பணித்துள்ளார். இது தொடர்பாக எதிர்காலத்தில் சகல கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் தகவல் திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இலத்திரனியல் அடையாள அட்டையில் கை விரல் அடையாளம் உட்பட பல்வேறு விபரங்களும் அடங்கிய பூரணமான தகவல்கள் இணைக்கப்படவுள்ளதாகவும் இவற்றைப் பெற்றுக் கொள்வது தொடர்பான முன்பயிற்சிகள் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப் படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்


## G.C.E. (O/L) Examination model Paper

**விஞ்ஞானம்** | 34 | T | I |

1) முன்சிறு குடலில் உணவுக்கு காரத்தன்மையை வழங்குவது
   1) இரைப்பைச்சாறு  2) பித்தச்சாறு
   3) சதையச்சாறு  4) குடற்சாறு

2) ஒரே கூட்டத்தைச் சேர்ந்த விலங்குகள்
   1) வௌவால், திமிங்கிலம், மனிதன்
   2) மரவட்டை, நத்தை, இறால்
   3) மண்புழு, லீச்சட்டை, சாரைப்பாம்பு
   4) சிலந்தி, பல்லி, ஈ

3) திறந்தவெளியில் வளரும் தாவரத்தின் மீது விழும் ஒளியின் செறிவுக்கு ஏற்ப ஒளித்தொகுப்பு, சுவாச வீதம் மாறுபடும் விதத்தை பின்வரும் வரைபு காட்டுகின்றது. வரைபுக்கு அமைய நீங்கள் வரும் முடிவு.





1) ஒளியின் செறிவு அதிகரிக்கும் போது சுவாசவீதமும் அதிகரிக்கின்றது.
2) ஒளியின் செறிவு அதிகரிக்கும்போது ஒளித்தொகுப்பு வீதம் தொடர்ச்சியாக அதிகரிக்கும்.
3) ஒளியின் செறிவு அதிகரிக்கும்போது ஒளித்தொகுப்பு வீதம் அதிகரித்து பின் குறிப்பிட்ட பெறுமானத்தின் பின் மாறிலியாகும்.
4) எந்தவொரு ஒளிச்செறிவிற்கும் சுவாச வீதமும் ஒளித்தொகுப்பு வீதமும் சமனாகும்

4) மனிதக் காதிலுள்ள செவிச்சிற்றென்புகளின் தொழில்
   1) உடலை சமநிலையில் வைத்திருத்தல்
   2) நடுச்செவியின் அமுக்கத்தை புறசெவியின் அமுக்கத்துடன் சீராக்கல்
   3) நரம்பு அந்தங்களைத் தூண்டுதல்
   4) அதிர்ச்சியை விருத்தி செய்து உட்செவியை நோக்கி ஊடுகடத்தல்

5) பின்வரும் கூற்றுக்களுள் இலிங்க இனப்பெருக்கம் தொடர்பான பிழையான கூற்று
   1) சேய் அங்கி தாய் அங்கியிலிருந்து வேறுபட்டுக் காணப்படும்
   2) ஒடுங்கல் பிரிவு, இழையுருப் பிரிவு ஆகிய இரண்டும் நடைபெறும்
   3) சேய் அங்கி தாய் அங்கியை ஒத்துக் காணப்படும்.
   4) ஆண்புணரி பெண்புணரியுடன் இணையும்

6)





மலத்தில் காணப்பட்ட தாவரம் B இன் வித்துக்கள் மூலம் கிளையின் மீது புதிய தாவரங்கள் தோன்றி அதற்குத் தேவையான உணவைப் பெற்றுக்கொள்ள அதன் வேர் உரியம் வரை வளரும்

தாவரமும் A யும் அதன் மீது வளரும் தாவரம் **B** பற்றியும் மேலுள்ள உரு விளக்குகின்றது மேலே கூறப்பட்ட தொடர்புகளில் சரியாக பெயரிடப்பட்டுள்ள தொடர்பு


| | உரிய அங்கிகள் | உணவுத் தொடர்பு |
|---|---|---|
| 1) | பறவை, தாவரம் B | ஒட்டுண்ணி |
| 2) | தாவரம் A. தாரம் B | ஒட்டுண்ணி |
| 3) | பறவை, தாவரம் A | ஒரட்டிலுண்ணல் |
| 4) | தாவரம் A, தாவரம் B | ஒன்றியவாழிகள் |

7) குருதி பாய்ந்தோடும் சரியான ஒழுங்கு
   1) மயிர்த்துளைக்குழாய், நாடி, நாளம், இதயம்
   2) மயிர்த்துளைக் குழாய், இதயம், நாளம், நாடி
   3) இதயம், நாடி, நாளம், மயிர்த்துளைக்குழாய்
   4) இதயம், நாடி, மயிர்த்துளைக்குழாய், நாளம்




8) படத்தில் உள்ள உரு கடலில் உள்ள உணவு வலையைக் காட்டுகின்றது. சூடமீனின் போசனை மட்டத்தின் உயிர்த்திணிவு
   1) சமன் மீன் போசனை மட்டத்தின் திணிவை விட அதிகமாகும்.
   2) தாவரபிளந்தன் போசனை மட்டத்தின் உயிர்த்திணிவை விட அதிகமாகும்.
   3) சீல் மீன் போசனை மட்டத்தின் உயிர்த்திணிவை விட மிகக் குறைவாகும்.
   4) சுறா போசனை மட்டத்தில் உயிர்த் திணிவைவிட மிகக்குறைவாகும்.

9) படத்தில் காட்டப்பட்டுள்ளது
   1) வேர்த்தண்டு கிழங்கு
   2) குமிழம்
   3) தண்டுக்கிழங்கு
   4) முகிழ்





10)



படத்தில் பூவில் தன்மகரந்தச் சேர்க்கையைத் தவிர்த்து அயன் மகரந்தச் சேர்க்கையை மேற் கொள்வதற்கு கொண்டுள்ள இசைவாக்கம்
   1) இருகால முதிர்ச்சி
   2) வெவ்வேறு மட்டங்களில் அமைந்த ஆணகம் பெண்ணகம்
   3) தன்மலட்டுத்தன்மை
   4) வெளிப்புறம் திரும்பிய மகரந்தக்கூறு

11) கீழே சில விலங்குகள் கொண்டுள்ள இயல்புகள் தரப்பட்டுள்ளன.
a - இதயத்தில் நான்கு அறைகொண்ட இதயம் காணப்படுதல்.
b - தோலில் உரோமங்கள் காணப்படுதல்.
c - ஓர்சீரிட உடல் வெப்பநிலையைக் கொண்டிருத்தல்.
d - புறச்செவிச்சோணை காணப்படுதல்.
இவற்றுள் முலையூட்டிகள் மாத்திரம் கொண்ட இயல்புகள்
1) a, b  2) a,b,c  3) b,d மட்டும்  4) c,d மட்டும்


12) மனிதனின் சிறுநீர்ப்பையின் சுவரில் காணப்படும் கலம்
1)  2)  3)  4)



13) யாதேனும் பதார்த்தத்தின் அணு தொடர்பான கூற்றுக்களில் எப்பொழுதும் உண்மையானது
   1) எல்லா அணுக்களும் சர்வசமமானவை
   2) சில அணுக்களின் கருவில் உள்ள புரோத்தன் எண்ணிக்கை மாறுபடும்
   3) எப்பொழுதும் ஒரேயளவான நியூத்திரன் எண்ணிக்கை அணுவின் கருவில் காணப்படும்.
   4) எப்பொழுதும் ஒரேயளவான புரோத்தன் எண்ணிக்கை அணுவின் கருவில் காணப்படும்.

14) பொப் என்னும் சத்தத்துடன் தகனமடையும் வாயுவை வெளியேற்றும் சந்தர்ப்பம்
   1) பொற்றாசியம் பரமங்கனேற்றை வெப்பமேறும் போது
   2) ஐதரசன் வொட்சைட்டு பிரிகையடையும் போது
   3) மக்னீசியம் ஐதரோக்குளோரிக்கமிலத்துடன் தாக்கமடையும் போது
   4) கல்சியம் காபனேற்று ஐதான ஐதரோகுளோரிக் அமிலத்துடன் தாக்கமடையும்போது

15) உலோக கரண்டியின் மீது செம்பை படியச் செய்வதற்கு பொருத்தமான மாதிரியமைப்பு பின்வருவனவற்றுள் எது?
1)  2)  3)  4)




16) நுரைதீயணை கருவியைப் பயன்படுத்தி தீயணைக்கும் விதம்பற்றி மாணவன் ஒருவன் முன்வைத்த கூற்றுக்கள் மூன்று கீழே தரப்பட்டுள்ளது.
   a - வளிக்கும் எரியும் பொருளுக்குமான தொடர்பை நீக்கும்
   b - தகனத்துணையிலினால் எரியும் பொருள் மூடப்படும்
   c - எரியும் பொருளின் வெப்பநிலையை எரிபற்று நிலையைவிடக் குறைக்கும் இவற்றில் சரியானவை.
   1) a,c மட்டும்  2) a, b மட்டும்
   3) a மட்டும்  4) **b, c** மட்டும்

17) கீழே நான்கு சோடியமைரொட்சைட்டுக் கரைசல்கள் தரப்பட்டுள்ளன. (சோடியமைரொட்சைடின் சார் அணுத் திணிவு 40 **($1dm^3$=1 l)**

a - 2 $moldm^{-3}$ 500ml  b- 2 $mold^{-3}$ 250 ml
c- 1 $moldm^{-3}$ 1000ml  d - 1 $mold^{-3}$ 750 ml

இவற்றில் சோடியமைதரொட்சைட்டின் சமமான திணிவைக் கொண்டது எவை?
1) a, d மட்டும் 2) c, d மட்டும்
3) a, c மட்டும் 4) b, c மட்டும்

18) செறிந்த சல்பூரிக்கமிலத்தின் வெளிற்றும் இயல்பை விளக்குவது பின்வருவனவற்றுள் எது?
1) ஏனைய அமிலங்களை விட அடர்த்தி அதிகமாகும்.
2) நீரை கவரும் ஆற்றல் அதிகமாகும்.
3) காபோவைதரேற்றின் மீது விடும் போது காபன் மாத்திரம் மிகுதியாக விடப்படும்.
4) தூய அமிலம் மின்னைக் கடத்தாது.

19) சீமெந்து உற்பத்திச் செயன்முறையின் பிரதான படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.
a - கிளிங்கரைப் பெற்றுக் கொள்ளுதல்
b - சுண்ணாம்பு, களியை 1: 3 விகிதத்தில் கலத்தல்.
c - ஜிப்சத்துடன் சேர்த்து தூளாக்குதல்
d - கலவையை சூளையில் இட்டு சூடாக்குதல்.
சீமெந்து உற்பத்தியின் படிமுறைகளை ஒழுங்குபடுத்தும்போது கிடைப்பது
1) a,b, c, d 2) b,d,c,a 3) b,c,d,a 4) a,c,b,d


20) கரைசலொன்றின் குறித்த கனவளவை அளப்பதற்குப் பயன்படும் பொருத்தமான உபகரணம்
1) அளக்கும் உருளை 2) அளவி
3) முகவை 4) கூம்புக்குடுவை

21) சோடியம், குளிர்நீருடன் தாக்கமடையும்போது கிடைக்கும் அவதானம் அல்லாதது
1) வெப்பம் வெளியேறுதல்
2) ஐதரசன் வாயு வெளியேறுதல்
3) சோடியம் ஐதரொட்சைட்டு உருவாகும்.
4) சோடியத்துண்டு நீரின் மீது எழுந்தமாறான அசைவைக் காட்டுதல்


22) நடுநிலைத் தாக்கத்தைக் காட்டும் இரசாயனச் சமன்பாடு
1) $H_2SO_{4(aq)} + 2NaOH_{(aq)} \rightarrow Na_2SO_{4(aq)} + H_2O_{(l)}$
2) $CaCO_{3(s)} \rightarrow CaO_{(s)} + CO_{2(g)}$
3) $Mg_{(s)} + O_{2(s)} \rightarrow MgO_{(s)}$
4) $Pb(NO_3)_{2(aq)} + 2Nacl_{(aq)} \rightarrow 2NaNO_{3(aq)} + PbCl_{2(aq)}$

23) கடல் நீரில் உள்ள உருக்கில் ஏற்படும் துருப்பிடித்தலைக் குறைப்பதற்கு உருக்கினால் செய்யப்பட்ட கப்பல்களில் உருக்குடன் வேறொரு உலோகத்தையும் தொடர்புபடுத்துவர். இதற்குப் பொருத்தமான உலோகம்.
1) cu 2) Su 3) mg 4) pb

24) எல்லா மூலத்தினதும் பொதுவான இயல்பு
1) இவை அல்லுலோக ஒக்சைட்டுக்களாகும்
2) நீரில் கரைக்கும்போது $OH^-$ அயன்களை உருவாக்கும்.
3) நீரில் கரைக்கும் போது $H^+$ அயன்களை உருவாக்கும்.
4) அரிப்புக்குள்ளாகாது.





25) மேசையின் மீது வைக்கப்பட்டுள்ள மரக்குற்றியொன்றின் மீது விசை P ஐ வழங்கி இழுக்கும் போது தொழிற்படும் விசைகளை படம் காட்டுகின்றது. மரக்குற்றி அசைய முற்படும் வேளை உண்மையாகக் காணப்படுவது.
1) P =F
2) P = R 3) F =R 4) P =W




26) தளவாடியில் ஒளிக்கதிரொன்று பட்டுத் தெறிப்படைவதை படம் காட்டுகின்றது.
1) $60^0$ 2) $120^0$
3) $30^0$ 4) $90^0$

27) நெம்புகோலுக்கு எத்தனத்தை வழங்குவதன் மூலம் சுமையை உயர்த்திக் கொள்ள முடியும். இந்நெம்புகோல் தொடர்பான சரியான கூற்று.





1) எத்தனப் புயத்தின் நீளம் சுமைப் புயத்தின் நீளத்தைவிட அதிகமாகும்போது வழங்கப்பட வேண்டிய எத்தனம் குறைவாகும்.
2) சுமைப் புயத்தின் நீளம் எத்தனப் புயத்தின் நீளத்தைவிட அதிகரிக்கும்போது வழங்கப்பட வேண்டிய எத்தனம் குறைவாகும்.
3) சுமைப் புயத்தின் நீளம் எத்தனப் புயத்தின் நீளத்திற்குச் சமனாகும் போது வழங்கப்பட வேண்டிய எத்தனம் குறைவாகும்.
4) வழங்கப்பட வேண்டிய எத்தனத்தின் பருமன் சுமை எத்தனப் புயத்தின் மீது தங்கியிராது?

28) தெறிப்பின் பின்னர் சமாந்தர ஒளிக்கற்றைகளைப் பெறக்கூடிய ஆடி எது?




29)




ABC பாதை வழியே A இலிருந்து C வரை சிறுவன் பயணிப்பதற்கு 25 செக்கன் நேரம் எடுத்தது. AC திசையில் சிறுவனின் வேகம்
1) 3ms-1 2) 4ms-1 3) 7ms-1 4) 1ms-1

30) மேற்காவுகை தொடர்பான தோற்றப்பாடு அல்லாதது
1) பகல் காலங்களில் கடலிலிருந்து தரையை நோக்கி தரைக்காற்று வீசுதல்.
2) சூரியனில் இருந்து புவிக்கு வெப்பம் கடத்தப்படுதல்.
3) சிமினி அல்லாத மண்ணெய் விளக்கின் சுவாலை சீராகக் காணப்படாது
4) மரத்தின் கீழாக தீ மூட்டும்போது மரத்தின் இலைகள் அசையும்.

31) வீட்டு மின்சுற்றுடன் இணைக்கப்பட்டுள்ள மின்னழுத்தியின் வெப்பச்சுருள் மின்னழுத்தியின் உலோக உறையுடன் தொட்டுக்கொண்டிருக்கும்போது மின்னழுத்தியை செயற்படுத்தினால்
1) மின்னழுத்தி தொடர்புபடுத்தப்பட்டு சுற்றில் உள்ள உருகி உருகும்
2) தடக்கு ஆளி செயற்படும்.
3) மின்மனியின் தட்டு வேகமாகச் சுழலும்.
4) மின்னழுத்தியின் வெப்பச்சுருள் எரிந்துவிடும்.

32) பொருளொன்றின் வெப்பக் கொள்ளளவு $100\,j^0c^{-1}$ எனின் இதனை 20 c இலிருந்து 30 c வரை அதிகரிப்பதற்குத் தேவையான வெப்பத்தின் அளவு
1) 100 x 20 J 2) 100 x 30 J
3) 100 x 10 J 4) 100 x 50 J

33) சூழல் சமனிலை குழம்புவதற்கு காரணமான மனிதச் செயற்பாடு
1) நுளம்புகளை அழித்தல்
2) சேதனப் பசளைகளை பயன்படுத்தல்
3) பாம்புகளைக் கொல்லுதல்
4) சூரிய அடுப்புகளைப் பாவித்தல்

34) நுணுக்குப்பன்னியில் ஒலியலையானது மின்னாக மாற்றப்படுதல்
1) மட்டிசைத்தல் 2) பரிபாடையாக்கம்
3) ஊடுகடத்தல் 4) மட்டிசைப்பழித்தல்

## ஒளி அலைகளின் பயன்பாடு

1. நரம்புக்கருவிகள் ..............................., ..............................., .............................. ஆகும்.
2. ஒலியின் உரப்பை அளப்பதற்கு .................................................. பயன்படும்.
3. ஒலியின் உரப்பை அளக்கும் அலகு .................................................. ஆகும்.
4. சர்ப்பினா, பியானோ, எக்கோடியன் ஆகியவை ............................ கருவிகள்.
5. குருத்தோலை ஊதி ............................. அதிர்வினால் தொழிற்படும் ............... கொண்ட உபகரணம் ஆகும்.
6. ..........................., ........................... போன்ற காற்றுக் கருவிகளில் நாக்கு காணப்படுவதில்லை.
7. ..........................., ........................... ஆகியன தோற்கருவிகளாகும்.
8. தோற்கருவிகளில் ஈர்க்கப்பட்ட தோலின் இழுவையை மாற்றுவதன் மூலம் ஒலியின் .................................. மாற்றமடையும்.
9. குவிவில்லைகளுக்கு ஒளிக்கதிரை ......................... ஆற்றலும் குழிவில்லைகளுக்கு ஒளிக்கதிரை .............................. ஆற்றலும் உண்டு.
10. வில்லைகளின் வலு .................................. என்னும் அலகால் குறிக்கப்படும்.
11. மருத்துவத்துறையில் குடற்புண்கள், இதயம், குருதிக்குழாய்கள் போன்றவற்றில் ஏற்படும் கோளாறுகளைக் கண்டுபிடிக்கப் பயன்படும் என்டோஸ்கோப் (Ends cope) என்னும் உபகரணம் .............................. மூலம் தொழிற்படும்.
12. லேசர் கதிர்கள் ஒரே ..............................., .............................. கொண்டவை.
13. அண்மைக்காலமாக நவீன அடுப்புகளில் ........................ அலைகள் பயன்படுத்தப்படுகின்றன.
14. இம்முறையில் ......................., ..............................., ................ ஆகியவற்றை நன்மைகளாகக் கொள்ளலாம்.
15. ராடர் கருவிகளில் .................................................. பயன்படுத்தப்படுகின்றன.
16. எல்லாப் பொருட்களும் அவற்றின் வெப்பநிலைக்கேற்ப .............................. வெளியேற்றுகின்றன.
17. புளோரொளிர்வு மின்குமிழ்களில் குழாயினுள் உள்ள வாயுவினூடாக மின்னோட்டம் பாயும்போது ........................................ பிறப்பிக்கப்படுகின்றது.

# தவறான வெளியுறவுக் கொள்கையே இன்றைய நிலைமைக்கு காரணம்

## அரசைச் சாடுகிறார் சஜித் எம்.பி

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சிலவேளைகளில் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படலாம் என எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச.

நாடாளுமன்றததில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர், ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான அழுத்தங்களை வெற்றிக்கொள்ள கட்சி பேதமின்றி அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

உள்விவகாரப் பிரச்சினைகள் உள்ளக ரீதியில் தீர்வு காணப்படவேண்டுமே தவிர சர்வதேச ரீதியில் அல்ல என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு.

எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், பாதகமான விளைவுகளை எதிர் நோக்க நேரிடும். சர்வதேச சக்திகளின் அழுத்தங்களை முறியடிப்பதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமானது.

நாட்டின் வெளிவிவகாரக் கொள்கைகள் திருப்தி அடையும் வகையில் அமைய விலலை. வெளிவிவகார கொள்கைகளின் காரணமாகவே சர்வதேச நாடுகள் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்கின்றன.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மனித உரிமைமீறல்கள் இடம்பெற்றதாக ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் மற்றும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கூட்டாக ஒப்புக் கொண்டமை, நாட்டின் வெளிவிவகார கொள்கைகளில் முக்கிய திருப்பு முனையாக அமைந்தது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி, உறுப்பு நாடுகளின் இதயங்களை வென்றெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்ப் புலம்பெயர் மக்கள் தொடர்பிலான விவகாரங்களுக்காகவே வெளிவிவகார அமைச்சில் தனியான ஓர் அலகு உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கிராமிய உற்பத்திகளின் கண்காட்சியும் விற்பனையும்

(ஆனைக்கோட்டை)

வலி.தென்மேற்கு பிரதேச செயலக கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் நடாத்தும் கிராம மட்ட உற்பத்திகளின் கண்காட்சியும், விற்பனையும் இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் எஸ்.செல்வ ரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் திருமதி தவமணி அலோசியஸ் ஜெயதாஸன், கௌரவ விருந்தினராக மன்னார் ஓய்வுநிலை மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவானந்தன் பொன்மலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (104)

## வெளிவந்து விட்டது "வலு" காலாண்டு சஞ்சிகை

(யாழ்.நிருபர்)

செங்குந்தாவீதி, திருநெல்வேலியில் இயங்கும் கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையத்தினரால் மாற்றுத் திறனாளிகள் தொடர்பான தகவல்களையும், ஆக்கங்களையும் தாங்கி வெளிவரும் "வலு" காலாண்டு சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் நடைபெற்ற சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என் சண்முகலிங்கன் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார்.

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய அறங்காவலர் மகாராணி க.சோமசேகரம் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். கருவியின் கானங்கள் இசை நிகழ்வும் இடம்பெற்றது. (10)

## வேம்பிராய் இந்து மயானத்தின் குறைபாடுகள் நீங்குவது எப்போது

(சாவகச்சேரி)

வேம்பிராய் இந்து மயானத்தில் கொட்டகை இன்மையால் இறுதிக் கிரியைகள் மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மழை காலமான இக்காலகட்டத்தில் இந்து முறைப்படி தகனம் மேற்கொள்ளும் இடத்தில் கொட்டகை இல்லாமையாலேயே மழை காலங்களில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக இந்து மயானத்தை பயன்படுத்தும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதைப் பராமரிக்க வேண்டிய அதிகாரிகள் இதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

## உணவு உற்பத்தி விசேட பயிற்சி

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணியில் உள்ள விதாதா வள நிலையத்தில் உணவு உற்பத்தி தொடர்பான விசேட பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அரிசியை மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கக்கூடிய உணவு வகைகள் தொடர்பாகவே மேற்படி பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

## வலிகாமம் மேற்கில் சிறுவர் கழகங்கள்

(சங்கானை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனைத்து கிராமங்களிலும் சிறுவர் கழகங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் இவ்வாறு சிறுவர் கழகங்களை அமைத்து செயற்பட வைப்பதன் மூலம் சிறுவர்கள் மத்தியில் தலைமைத்துவ பண்புகளை விருத்தி செய்ய முயற்சி எடுக்கப்படவிருக்கிறது.

மேற்படி நடவடிக்கைகளை வலிகாமம் மேற்கு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகததர் மேற்கொண்டு வருகிறார்.



ஆவரங்கால் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய பரிசளிப்பு வைபவத்தின் போது விருந்தினர்கள் பாடசாலை அதிபர் தலைமையில் விழா மண்டபத்திற்கு அழைத்து செல்லப்படுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வினையும் காணலாம்.

## தித்திக்கும் திருவெம்பாவை இன்று ஆரம்பம்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானின் கீர்த்தியைப் பேசும் திருவெம்பாவைப் பூஜாரம்பம் இன்றாகும். மாணிக்கவாசக சுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற திரு வாசகத்தில் வரும் இத்திருவெம்பாவை தித்திக்கும் தீந்தமிழ்ப் பனுவலாகும்.

இன்று முதலாகத் தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறுகின்ற திருவெம்பாவைப் பூஜையானது இறுதியாக ஆர்த்திரா தரிசனத்துடன் நிறைவுக்கு வரும். இனிமையானதும் கருத்துச் செறிவுள்ளதும் ஆழ்ந்த பொருளுள்ளதுமான இத் திருவெம்பாவைப் பாடல்கள் இருபதும் படிக்குந்தோறும் இன்பம் பயப்பவை.

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ்சோதியான ஆண்டவனின் திருவருட்டிறத்தின் பெருமையை உணர்த்தி நிற்கும் இத்திருவெம்பாவை எல்லாக் கோவில்களிலும் பாடப்படுகின்ற சிறப்புடையதாகும்.

தினமும் அதிகாலை வேளையில் மூலஸ்தான மூர்த்திக்கு விசேட பூசை நடைபெற்று இந்தத் திருவெம்பாவைப் பாடல்களை ஓர் அடியார் உருக்கமுடன் பாட மற்ற அடியார்கள் "அரோஹரா" கோஷமிட்டு வணங்கி வழிபாடியற்றுவார்கள்.

ஒவ்வொரு பாட்டும் முடிய கற்பூர ஆராத்தி காட்டியே இத்திருவெம்பாவைப் பூசை இடம்பெறும்.

உமது உடம்புக்கு வருகின்ற நோய் தீர்க்கும் மருந்தாகத் தேன் பயன்படுவது போல எமது பிறவி எனும் பிணிக்கு அருமருந்தாக விளங்குவது திருவாசகம் எனும் தேனாகும். தித்திக்கும் தீந்தமிழ்ப் பனுவலாக விளங்கும் திருவாசகம் ஓதி உய்த்துணர்ந்து அனுபவிக்க எல்லையில்லாத ஆனந்தத்தை அள்ளித் தரும்.

மலர்களிலே இருக்கின்ற தேனை வண்டுகள் சேகரிக்குமாப்போல வேதாகம உபநிடதங்களில் மறைந்து பொதிந்திருக்கும் தத்துவ முத்துக்களை மாணிக்கவாசகர் நன்கு தோய்ந்து ஆய்ந்தெடுத்துத் திருவாசகத் தேனாகத் தந்திருக்கின்றார்.

ஆகவே தித்திக்கும் தீந்தமிழ்ப் பனுவலாக விளங்கும் திருவாசகத்திலுள்ள திருவெம்பாவை எனும் பதிகம் அடியார் பெருமக்களால் விரும்பி ஓதப்படுகின்ற பெருங்கீர்த்தியுடையது என்று கூறின் அதுசாலப் பொருந்தும்.

இத்திருவெம்பாவை விரதம் அனுட்டிக்க விரும்புபவர்கள் தினமும் அதிகாலை எழுந்து நீராடி சந்தியாவந்தனம் முடித்து சிவசிந்தனையுடன் சிவாலய தரிசனஞ் செய்தல்வேண்டும்.

இந்தப் பத்து நாள்களும் மதியம் ஒருபொழுது மட்டும் உண்டு, இரவு பால், பழம் அருந்தலாம். தினமும் ஏதாவது ஒரு கோவிலுக்குச் சென்று திருவெம் பாவைப் பூஜையில் பங்குகொண்டு வழிபாடு ஆராதனைகளில் ஈடுபட வேண்டும்.

பத்தாம் நாள் திருவாதிரையன்று சிவாலய தரிசனத்தில் பங்கேற்று அருந்திரா தரிசனத்தையும் கண்டுகளிதது சிவ சிந்தனையுடன் இறைவனுக்கு நிவேதித்த திருவாதிரைக் களியை வாங்கி உண்டு விரதத்தை பூர்த்தி செய்யலாம்.

எனவே, இன்று ஆரம்பமாகின்ற திருவெம்பாவைப் பூஜையில் வழிபாடாற்றி இறையருள் பெற்றுப் பூவுலகில் சகல சௌபாக்கியங்களுடன் வாழ வழிசமைப்போமாக.

*- தெய்வத் தமிழ்ச்சுடர்*
*இராசையா ஸ்ரீதரன்*

# இராணுவத்திற்குள் கடும் சண்டை

# மத்திய ஆபிரிக்காவில் 281 பேர் பலி!

ஆபிரிக்காவிலுள்ள மத்திய ஆபிரிக்க குடியரசு நாட்டில் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். இங்கு அதிபராக இருந்த பிரன்காயிஸ் பொசைசின் அரசை கடந்த மார்ச் மாதம் செலேகா புரட்சியாளர்கள் கவிழ்த்தனர். பினனர், செலேகா இஸ்லாமிய போராளிக் குழுவின் தலைவர் மைக்கேல் ஜொடோடியா அந்நாட்டின் அதிபரானார்.

அவர் செலேகா போராளிகளை இராணுவத்தில் சேர்த்து வருகிறார். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதையடுத்து இராணுவத்தில் உள்ள பிரன்காயிசின்



ஆதரவாளர்களுக்கும், ஜொடோடியா ஆதரவாளர்களுக்குமிடையே தொடர்ந்து கடும் சண்டை நடந்து வருகிறது. இதனால், நாட்டிலுள்ள 50 இலட்சம் மக்களில் 10 சதவிகித மக்கள் பக்கத்து நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இதேபோல் இராணுவத்திற்கு வெளியிலும் இரு பிரிவினருக்கிடையே மோதல் வலுத்துள்ளது.

கடந்த வியாழன் அன்று பழிக்குப்பழி வாங்கும் நோக்கில் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் கிறிஸ்தவ ஆயுதம் ஏந்திய குழுக்கள் தாக்குதல் நடத்தின.

இந்நிலையில் வெள்ளி இரவு ஆயுதம் ஏந்திய போராளிகள் தலைநகர் பேங்குயில் உள்ள அமிதி மருத்துவ மனைக்குள் புகுந்தனர். அங்கு கடந்த சில நாட்களாக நடந்த சண்டையில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்தோரை வெளியே இழுத்து வந்தனர். பின்னர் 10 இற்கும் மேற்பட்டோரை அவர்கள் சுட்டுக்கொன்றனர்.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெறும் கடும் சண்டையில் கொல்லப்பட்ட 281 பேரின் உடல்களை செஞ்சிலுவை சங்கத்தினர் கைப்பற்றியுள்ளனர். இது இன்னும் அதிகரிக்கும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். மத்திய ஆபிரிக்க குடியரசில் நடந்து வரும் சண்டையில் இருந்து நாட்டு மக்களை காப்பாற்ற பிரெஞ்சு இராணுவத்தினர் அங்கு விரைந்துள்ளனர்.

## இராட்சதக் கிரகம் கண்டுபிடிப்பு



சூரியனுக்கு மிக தொலைவில் உள்ள புதிய இராட்சத கிரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சர்வதேச விண்வெளி நிபுணர்கள் குழு ஆய்வு மேற்கொண்டுள்ளனர். அதில் சூரியனுக்கு அப்பால் மிக அதிக தொலைவில் புதிய இராட்சத கிரகம் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

எச்.டி. 106906 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கிரகம் ஜுபிடர் கிரகத்தை விட 11 மடங்கு பெரியது, இதைச் சுற்றி சூரியன் போன்ற நட்சத்திரம் உள்ளது.

மற்ற கிரகங்களின் அதிவேக சுழற்சியால் சிதறுண்டு இக்கிரகம் உருவாகியிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மேலும் இந்தக் கிரகத்தின அருகே பூமி இருப்பதைப் போன்று நட்சத்திர கூட்டங்கள் உள்ளன.

## உலகச் செய்திகள்

## இந்திய மாநில தேர்தலில் பாரதிய ஜனதா முன்னிலையில்



இந்தியாவில் இடம்பெற்ற மாநிலத்தேர்தலில் தற்போதைய எதிர்கட்சியான பாரதிய ஜனதா கட்சி மூன்று மாநிலங்களின் ஆட்சியை கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

புதுடில்லி இராஜஸ்தான் மற்றும் மத்திய பிதேசம் ஆகிய மாநிலங்களில் பாரதியே ஜனதா கட்சி முன்னிலையில் உள்ளது.

அதேநேரம் சஸ்ட்டிஸ்கார் மாநிலத்தில் காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதாக் கட்சிகள் சமபலத்தில் உள்ளன.கடந்த தேர்தலின் போது சஸ்டிஸ்கார் மாநிலம் பாரதிய ஜனதா கட்சியின் கீழ் இருந்தது.

இந்த முறை அந்தக் கட்சி ஏழு ஆசனங்களை இழந்துள்ளது.

ஏனைய மாநிலங்களில் காங்கிரஸ் பாரிய வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது. குறிப்பாக புதுடில்லியில் மூன்றாம் இடத்தையே காங்கிரஸ் பெற்றுள்ளது.

முதலாம் இடத்தில் பாரதியே ஜனதாக் கட்சியும், இரண்டாம் இடத்தில் அசாம் ஆட்மிக்கட்சி உள்ளது.

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற இந்தத் தேர்தல், அடுத்த வருடம் நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்ற தேர்தலின் முற்கூட்டிய பெறுபேறுகளாக அமையும் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்தத் தேர்தலில் மூன்று மாநிலங்களை கைப்பற்றும் கட்சி, அடுத்த நாடாளுமன்ற தேர்தலிலும் வெற்றி பெறக் கூடிய சாத்தியம் அதிகமாக கொண்டிருக்கும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி பாரதிய ஜனதாக் கட்சி இதில் மூன்று மாநிலங்களின் முன்னிலையில் உள்ளது.

நரேந்திர மோடி தலைமையில் பாரதிய ஜனதாக் கட்சியின் பிரசார குழு, இந்தியாவில் அடுத்த நாடாளுமன்ற தேர்தலின் வெற்றியை நோக்கி நகர்வதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## வறிய நாடுகளின் ஏற்றுமதி ஊக்குவிப்பு 160 நாடுகள் ஒப்பந்தத்தில் கைச்சாத்து

வறிய நாடுகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான ஒப்பந்தத்தில் 160 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன.

உலகிலுள்ள வறிய நாடுகள், தங்களின் பொருட்களை விற்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் உலக வணிகத்தை ஊக்குவிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டுள்ளது.

சுமார் 160 நாடுகளின் வணிகத் துறை அமைச்சர்கள், வரலாற்று ரீதியான இந்த உடன்பாட்டை எட்டியுள்ளனர். இந்தோனேசியாவில் கூடிய உலக வர்த்தக ஸ்தாபனத்தின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், வணிகத்தில் நிலவும் இறுக்கமான அரச கட்டுப்பாடுகள் மற்றும் வரி விதிப்புகளில் தளர்வுகளைக் கொண்டுவர இணக்கம் கண்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஆண்டுக்கு சுமார் ஒரு இலட்சம் கோடி டொலர்கள் பணத்தை உலக பொருளாதாரத்தில் சேர்க்க முடியும் என்று சில பொருளாதார வல்லுநர்கள் நம்புகின்றனர்.

இதன் மூலம் சுமார் இரண்டு கோடி தொழில்கள் உருவாகும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்வதில் உள்ள தடைகளைக் குறைக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஒப்பந்தத்தின் மூலம் பெரிய மாற்றங்கள் ஏற்படாது என்றும் சில செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


புதிய இணக்கப்பாடுகளை எட்டுவதில் சிரமங்களை சந்தித்து வந்த உலக வர்த்தக ஸ்தாபனத்திற்கு இந்த ஒப்பந்தம் ஒரு முக்கியமான முன்னகர்வு என்று இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஒருவர் தெரிவித்தார்.

## ஐரோப்பாவில் பனிப்புயல் இயல்பு நிலையில் பாதிப்பு

ஐரோப்பா கண்டத்தில் சமீபத்தில் இங்கிலாந்து, ஜேர்மனி, நெதர்லாந்து, போலந்து, தெற்கு ஸ்காண்டிநேவியா ஆகிய நாடுகளில் "ஸாவர்" என்ற சூறாவளிப்புயல் கடுமையாக தாக்கியது.

மணிக்கு 158 கி.மீற்றர் வேகத்தில் சுழன்றடித்த சூறாவளியில் பல வாகனங்களும், வீடுகளும் சிக்கிச் சின்னா பின்னமாயின.

போலந்தில் 5 இலட்சம் வீடுகளும், சுவீடனில் 50 ஆயிரம் வீடுகளும், ஜேர்மனியில் 4 ஆயிரம் வீடுகளும் சேதம் அடைந்தன. ஆம்ஸ்டர்டாம், பெர்லின், ஹம்பர்க் உள்ளிட்ட விமான நிலையங்கள் விமானங்களை இரத்து செய்தன. புயலுக்கு 4 பேர் பலியாகி உள்ளனர்.



தற்போது இதனுடன் சேர்ந்து பனிப்புயலும் கடுமையாக தாக்குகிறது. கடுமையாக பனி கொட்டுகிறது. வடக்கு ஜேர்மனி, நெதர்லாந்து உள்ளிட்ட கடல்களில் கடல் நீர் ஐஸ் கட்டிகளாக மாறிவிட்டன.

பனிப்புயலில் சிக்கி இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் மரம் விழுந்ததில் சுவீடனில் ஒருவரும், போலந்தில் 6 பேரும் அடங்குவர்.

பனிப்புயல் கடுமையாக வீசுவதால் நேற்றுமுன்தினம் மட்டும் 1900 விமானங்களின் போக்குவரத்து இரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் விமான நிலையங்களில் சிக்கி மக்கள் தவிக்கின்றனர்.

உணவுப்பொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வீடுகளில் 3 இஞ்ச் உயரத்துக்கு பனி படர்ந்து கிடக்கிறது. இதனால் வாகன போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. பனிபுயலில் சிக்கி இதுவரை 3 பேர் பலியாகி உள்ளனர்.

தெருவெங்கும் பனி படர்ந்து கிடப்பதால் மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கி கிடக்கின்றனர். இதனால் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.

### மக்களை மீண்டும்...

ஆனாலும் மாகாணசபைக்குரிய அதிகாரங்கள், மற்றும் சட்ட விதிகள் எவைகள் என தெரிந்து கொண்டும்,....
அதற்கு மாறாக கருத்துக்களை சொல்லி வருகிறார்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பினர்.
வட மாகாண சபை சிறந்து செழித்து எமது மக்களுக்கான அழகிய பூங்காவன மாக மாற வேண்டும் என்பதற்காக நாம் எமது பங்களிப்பை செலுத்த தயாராகவே இருக்கின்றோம்.
மீன் மணக்கும், மீன் விற்ற காசு மணக்காது என்ற ரீதியிலான சுத்து மாத்து அரசியல் இங்கு வேண்டாம்.
நாங்கள் கட்டி வைத்த கட்டிடங்களுக்கு நீங்கள் விளக்கேற்றி நாடா வெட்டி திறந்து வைப்பது சரி என்றால்,....
எங்களது பங்களிப்போடும் மாகாண சபையை திறம்பட நடத்த முன்வாருங்கள்.
நாங்கள் பாய் விரிக்க, எமது அர்ப்பணங்களை முழுமையாக நிராகரித்து அந்தப் பாயில் நீங்கள் மட்டும் படுத்துறங்க நினைக்கும் தான்தோன்றித்தனம் வேண்டாம்.
கூட்டமைப்பின் சு. மா. சிந்தனைகள் தமிழ் பேசும் மக்களை மீண்டும் இருண்ட யுகத்தினுள் தள்ளிவிட உதவுமே ஒழிய, எமது மக்களுக்கு ஒரு போதும் விமோசனங்களை பெற்றுத்தரப் போவதில்லை. சரித்திரங்களை மாற்றியமைப்போம் வாருங்கள் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் நான் பகிரங்க அழைப்பு விடுக்கிறேன். உங்களில் குற்றமற்றவர்கள் முதலில் குற்றவாளிக்கு கல்லால் எறியுங்கள்.

கொலையும், கொள்ளையும், கப்பமும் வரியும் உங்கள் கட்சிக்கொள்கைகளாக வைத்திருந்தவர்கள் நீங்கள்.
சித்திரவதை முகாம்களை வைத்திருந்தவர்கள் நீங்கள்... ஆகவே உங்களில் குற்றமற்றவர்கள் குற்றவாளிக்கு கல்லால் எறியுங்கள்...

# சிறப்பாக நடைபெற்ற ஆறுமுக நாவலர் மாநாடு



அகில இலங்கை இந்து மாமன்றமும், சிவஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையும் இணைந்து திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை மற்றும் மன்னார் மாவட்ட அற நெறிப் பாடசாலைகளின் இணையம் ஆகியவை இணைந்து மன்னாரில் சிவஸ்ரீ ஆறுமுகம் நாவலர் மாநாட்டை நடத்தியுள்ளன.

மன்னார் அருள்மிகு திருக்கேதீஸ்சர ஆலயத்தில் நேற்று முன்தினம் [illegible] சனிக்கிழமை மற்றும் நேற்று ஆகிய இரு தினங்கள் வெகு விமர்சையாக குறித்த மாநாடு இடம் பெற்றது.

மன்னாரில் இருந்து ஆறுமுக நாவலரின் ஊர்வலம் மன்னார் பிரதான பாலம் வரை இடம்பெற்றது .

இதன் போது பல நூற்றுக் கணக்கானவர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தனர். பின் மன்னார் அருள்மிகு திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் மாநாடு இடம் பெற்றது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதுவர் வி. மகாலிங்கம் கலந்து கொண்டார்.

## சுயவிருப்பின்...

போரினால் உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ள வடபகுதி மக்கள் மத்தியில் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை ஊக்குவிப்பதற்கான அவசியமோ அவசரமோ தற்போது இல்லை என்று கருதுவதாக வடமாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கம் கூறியுள்ளார்.

வேரவில், கிராஞ்சி மற்றும் வலைப்பாடு ஆகிய கிராமங்களில் சுகாதாரத்துறை அதிகாரிகளினால் பெண்களுக்கு கருத்தடை கட்டாயமாக வழங்கப்பட்டிருந்ததாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன.

அதனையடுத்து வடமாகாண சுகாதார அமைச்சு, விசேட விசாரணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை நடத்தியிருந்தது. இந்தக் குழுவின் அறிக்கை வடமாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கத்தினால் அமைச்சின் வவுனியா அலுவலகத்தில் வைத்து நேற்றைய தினம் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் பொறுப்புக் கூறல், அடிப்படை சுகாதார வசதிகள் மற்றும் மகளிர் குடும்ப சுகாதார உரிமை என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் குடும்பத்திட்ட முறைகள் அனைத்தையும் தமிழ்மொழியில் வழங்கவும், குடும்பத்திட்டம் தொடர்பாக பயனாளர்கள் தமது குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து முடிவுகளை மேற்கொள்வதற்கு வசதியாக போதிய கால அவகாசம் வழங்கவும் வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

குடும்பத்திட்ட சுகாதாரக் கல்வி வழங்குதல் தொடர்பில் பொதுச் சுகாதார உத்தியோ கத்தர்களுக்கு விசேட பயிற்சி வகுப்புகளை வழங்கவும் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வடமாகாண சுகாதாரத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விசேட மகப்பேற்று மற்றும் பெண்களுக்கான மருத்துவ நிபுணர் அடங்கிய விசேட குழுவினால் நடத்தப்பட்ட ஆய் வின்படி, யாரையும் வற்புறுத்தியோ பயமுறுத்தியோ இக்கருத்தடை முறைமை வழங்கப் படவில்லை என்பது தெளிவாகின்றது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொடரும்...

வாரமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடை மழையினால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், முல்லைத்தீவு பெருங்கடலில் கடும் காற்றுடன் கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தங்களது குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இந்த மீனவர்கள் கூறுகின்றனர்.

மீனவர்களின் தொழில் முடக்கத்தால் முல்லைத்தீவில் மீன்களுக்கும் பெரும் தட்டுப்பாடும் நிலவி வரும் நிலையில் மன்னார் போன்ற பிற மாவட்டங்களிலிருந்தே மீன்கள் முல்லைத்தீவுக்கு விற்பனைக்காக சந்தைக்கு வருவதாகவும் அவ்வாறு வரும் மீன்கள் கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவில் தற்போது மீனவத் தொழில் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, சிறுகடல் மீன்கள் தற்பொழுது சந்தையில் விற்பனைக்கு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கையின்...

நல்லிணக்கம் ஒரு தேசமாக எல்லோரிடமும் அன்புடனும் அமைதியுடனும் சேர்ந்து வாழுதல் போன்ற அளவுகடந்த பல பண்புகளை நெல்சன் மண்டேலாவிடமிருந்து கற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நெல்சன் மண்டேலாவிடமிருந்து தனது அரசும் பல பாடங்களை கற்றுக் கொண்டதாக சந்திரிகா தெரிவித்துள்ளார்.

1983ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் நடத்தப்பட்ட விதம் குறித்து நாங்களும் உண்மை அறியும் ஆணைக்குழுவை உருவாக்கினோம்.

சில சிங்கள கடும்போக்குவாதிகளினால் தமிழ் மக்களுக்கு நடந்த துயரங்களுக்காக நாட்டின் தலைவர் என்ற ரீதியில் நான் மன்னிப்புக் கோரியிருந்தேன்.

மண்டேலாவிடமிருந்தும் அவரது செயற்பாடுகளிலிரு ந்தும் தான் இவற்றை கற்றுக் கொண்டதாக சந்திரிகா சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இலங்கையின் இன்றைய நிலை கவலையளிப் பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தாங்கள் சிங்கள பௌத்த தேசத்துக்கு மட்டுமே பிரதிநிதி கள் என்று காட்டுவதற்காகவே மற்ற சமயங்களை, இனங்களை, சமூகங்களை ஒடுக்கும் நடவடிக்கைகளில் சில அரசியல்வாதிகள் முனைகிறார்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## எட்டு நாடுகளின்...

தில் இருந்து கைப்பற்றப்பட்ட எம்.16 ரக தாக்குதல் துப்பாக்கி அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு தரப்பின் உயர்மட்ட தகவல்கள் தெரிவித்தன.

இதனைத் தவிர புலிகளின் இரணைமடு விமான ஓடுதளத்திற்கு தேவையான மின்கலன்கள், மின் விளக்குகள் என்பன பிரித்தானியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் தயாரித்தவை.

அத்துடன் 3 ஸ்லின் ரக விமானங்கள் பங்களாதேஷ் நாட்டின் விவசாய இரசாயன நிறுவனத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டதாக செக் குடியரசு இலங்கைக்கு அறிவித்துள்ளது.

இந்த உண்மைகளை வெளியிட்டு மேற்குலக நாடுகளின் முகமூடியை கழற்றப் போவதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

புலிகளிடம் இருந்த ஆயுதங்களின் பெறுமதி சுமார் 1400 மில்லியன் ரூபா என தெரியவந்துள்ளது.

## ஐ.நா. மனித...

த்த வேண்டும். அப்படிச் செய்தால் மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கையை சிக்கவைக்கும் முயற்சிகளை முறியடிக்க முடியும்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மத்திய அரசாங்கம் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

## உள்ளக...

உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் பூரண ஒத்துழைப்பை வழங்கிச் செயற்படுமாறும் தோழமையோடு கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் வங்கியின் துணைச்சேவை நிலையம் கன்னாதிட்டியில் திறப்பு

மக்கள் வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர வியாபார நிலையம் இன்று கன்னாதிட்டியில் திறந்து வைக்கப்படுகின்றது.

கன்னாதிட்டி வீதியிலுள்ள மக்கள் வங்கியின் பிராந்திய தலைமைக் காரியாலயத்தில் தொழில் முயற்சியாளர்களுக்கு பிரத்தியேகமான நிதிசார் துணைச் சேவைகளை வழங்கும் நிலையம் காலை 10.05 மணிக்கு மக்கள் வங்கியின் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் ரி.ஏ. ஆரியபாலவினால் திறந்து வைகக்கப்படுகின்றது. (இ)

# சமாந்தரமாக சைக்கிள்களில் சவாரி செய்யும் இளசுகள்

யாழ்.நகர வீதிகளில் சமாந்தரமாக சைக்கிள் சவாரி செய்வோர் மீது போக்குவரத்துப் பொலிஸார் கடும் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர்.

மாலை வேளைகளில் சமாந்தரமாக சைக்கிள்களில் வீதியுலா வரும் இளசுகளின் செயறபாடுகளால் போக்குவரத்து இடையூறுகள் ஏற்படுகின்றன.

இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் வீதிகளில் சைக்கிள்களில் செல்வோரை பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர். எனினும் இவ்வாறான செயற்பாடுகளை முற்றுமுழுதாக தடுக்க முடியவில்லை என்றும், இது விடயத்தில் பொதுமக்களே உணர் ந்து செயற்படவேண்டும் எனவும் போக்குவரத்து பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நேற்று மாலையும் இவ்வாறு சவாரி செய்த பலர் ஆஸ்பத்திரி வீதியில் போக்குவரத்து பொலிஸாரினால் அறிவுறுத்தப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (இ)

# தோட்டக்காணியிலிருந்து குண்டு மீட்பு

(மருதனார்மடம்)

யாழ்.மருதனார்மடம், கைதடி வீதியிலுள்ள தோட்டக்காணி ஒன்றிலிருந்து குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உரப்பையில் இடப்பட்டிருந்த நிலையில் இந்தக் குண்டு நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த தோட்டக்காணியின் உரிமையாளர் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து இந்தக் குண்டு மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (25)

# அமைச்சர் அளுத்கமகேயால் மனைவிக்கு கொலை மிரட்டல்

### பாதுகாப்பளிக்குமாறு பொலிஸில் முறைப்பாடு

விளையாட்டுத்துறை அமைச்சரான எனது கணவர் மகிந்தானந்த அளுத்கமகேயினால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக அவரது மனைவி அம்பன் பொல ஆஷா விஜயந்தி பெரேரா பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோனுக்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அமைச்சர் மகிந்தானந்தாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதனை தான் செய்திருக்க வேண்டும் என்று சந்தேகித்தே, கணவர் தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுப்பதாகவும் அமைச்சரின் மனைவி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார் என பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கணவரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தனக்கு பாதுகாப்பளிக்குமாறும் பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலம் தெரிவித்துள்ள ஆஷா விஜயந்தி பெரேரா, தனது கணவருக்கு எதிராக செய்யப்பட்டுள்ள இலஞ்ச ஊழல் தொடர்பான விசாரணை களை துரிதப் படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சர் மகிந்தானந்தவுக்கும் அவரது மனைவி ஆஷா விஜயந்திக்கும் இடையில் விவாகரத்து வழக்கொன்று கடுவெல நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்துவருவதாகவும் சொல்லப்படுகின்றது.

இவ்வருடம் ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலப் பகுதியில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவி ற்கு கிடைக்கப்பெற்ற முறைப் பாடுகளில் 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கலாக 111 அரசியல்வாதிகளுக்கு எதிரான முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே, மகிந்தானந்தவின் மனைவியான ஆஷா விஜயந்தி பெரேரா இந்த முறைப்பாட்டினை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவா...

பட்ட இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம் தற்காலத்திற்கு ஏற்றவகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அமுலில் இருக்கும் சட்டத்தின் படி ஆணைக்குழுவினால் பரிந்துரைகளை மட்டுமே முன்வைக்க முடியும். இதனால் நேரடியான அழுத்தங்களைக் கொடுக்கக் கூடிய வகையில் சட்டமூலம் திருத்தப்படுகிறது.

இந்தத் திருத்தம் நிறைவேற்றப்படுவதன் மூலம் இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்படும் மனித உரிமை குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க முடியும் என்றார்.

# மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

## இந்திய கடற்படைத்தளபதி தெரிவிப்பு

(புதுடில்லி)

கடற்கொள்ளையர்களை அடக்கும் நோக்கம் என்று கூறி நாடு ஒன்றின் சட்ட எல்லைக்கு புறம்பாக இந்து சமுத்திரத்தில் மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் இயங்கி வருவது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என இந்திய கடற்படைத் தளபதி அத்மிரல் டி.ஷே. ஜோஷி தெரிவித்துள்ளார்.

டைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகையிடம் அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச கடல்சார் அமைப்பு (I.M.O), இந்த மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பில் பொருத்தமான கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் இந்து சமுத்திரத்தில் இடம்பெறும் மிகப் பெரிய சட்டவிரோத நடவடிக்கையாக இது மாறிவிடும்.

அது மட்டுமல்ல இந்தியாவின் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும். அண்மையில் எம்.பீ. சீமன்காட் ஓஹியோ என்ற கப்பல் கைது செய்யப்பட்டது.

அதில் நான்கு இனங்களைச் சேர்ந்த ஆயுதம் தாங்கிய 25 பேர் இருந்தனர். அவர்கள் துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் சட்டவிரோதமாக தூத்துக்குடிக்கு எடுத்துச் சென்றுக் கொண்டிருந்தனர்.

இந்த நபர்கள் வர்த்தக கப்பல்களை கடற்கொள்ளையர்களிடம் இது பாதுகாக்கும் நிறுவனம் என்று கூறப்படும் தனியார் நிறுவனத்தை சேர்ந்தவர்கள். இப்படியான சில நிறுவனங்கள் இந்து சமுத் திரத்தில் இயங்கி வருகின்றன.

இவர்கள் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக குறிக்கப்பட்ட கடமை நேரத்தில் கப்பல்களில் ஏறி இறங் குகின்றனர். அவற்றில் அரசு சாரத தனியார் பாதுகாப்பாளர்களும் உள்ளனர்.

எந்தவொரு நாட்டின் துறை முகத்திலும் இவர்கள் பற்றிய பதிவுகள் இல்லை. இது மும்பாய் மீது தாக்குதல் நடந்ததைப் போன்ற தாக்குதலை நடத்த பயங்கரவாதிகளுக்கு சிறந்த வாய்ப்பாக அமையும்.

இந்து சமுத்திரத்தின் பொருளாதார பிராந்தியத்தில் இப்படியான எத்தனை கப்பல்கள் இருக்கின்றன? அவற்றில் இருக்கும் ஆயுதங்கள் என்ன? என்பது பற்றிய சர்வதேச தரங்களுக்கு அமைவான விபரங்கள் தேவை.

இந்தியக் கடற்படை, கேரளா லட்சதீவுகளுக்கு அருகில் கடற்கொள்ளையர்களின் 4 படகுகளை மூழ்கடித்த பின்னர் கடந்த இரண்டு வருடங்களாக இந்தியாவில் இருந்து 450 கடல் மைல் தொலைவு வரை கடற்கொள்ளையர்களின் எந்த தாக்குதல்களும் நடக்கவில்லை. இதனால் மிதக்கும் ஆயுதக்களஞ்சியம் தேவையில்லை என்றார்.

# தொடரை வென்றது தென்னாபிரிக்கா

(டேர்பன்)

இந்தியாவிற்கெதிரான இரண்டாவது போட்டியில் 134 ஓட்டங்களால் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா ஒருநாள் தொடரை கைப்பற்றிக்கொண்டது.

டேர்பனில் நேற்று நடைபெற்ற இப்போட்டி 49 ஓவர்களாக குறைக்கப்பட்டிருந்த நிலையில், நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச முடிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்ஆபிரிக்க அணியில், தொடக்க வீரர்கள் டிகொக், அம்லா இந்திய பந்து வீச்சாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினர்.

டிகொக் 106, அம்லா 100, ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தனர். அடுத்து களம் இறங்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர். இறுதியில் தென் ஆபிரிக்க அணி 6 விக்கெட் இழப்புக்கு 280 ஓட்டங்கள் குவித்தது. இந்திய அணி தரப்பில் முகமது சமி 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதையடுத்து 281 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய தரப்பில் ரோகித் சர்மா, தவான் களம் இறங்கினர். ஆட்டம் தொடக்கத்திலேயே தவான் 0 ஆட்டம் இழந்தார். அடுத்து களம் இறங்கிய ஹோலியும் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார். இதனால் இந்திய அணி முதலிலேயே நிலை தடுமாற ஆரம்பித்தது.

அடுத்து களம் இறங்கிய வீரர்கள், சர்மா (18), ரஹானே (8), தோனி (19), ரெய்னா (36) அஸ்வின் (15), ஜடேஜா (26), யாதவ் (1), சமி (8) ஆகிய ஓட்டங்களில் தென் ஆபிரிக்காவின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் ஆட்டம் இழந்தனர்.

இறுதியில் இந்திய அணி 35.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. தென் ஆபிரிக்க அணியில் சோட்சோபே 4, ஸ்ரெயின் 3, விக்கெட்டுகளை வீழ்த்தினர். 106 ஓட்டங்கள் குவித்த டிகொக் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

# வீட்டை நிர்வகிக்க தெரியாதோர் தூதுவர்களாக நியமனம்

## என்கிறது ஜே.வி.பி



வெளிநாடுகளில் இலங்கைத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டவர்களில், அதிகளவானவர்கள் அரசியல் ரீதியாக நியமனங்கள் வழங்கி நியமிக்கப்பட்டவர்கள் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு, நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றி எதனையும் அறியாத தமது வீட்டைக் கூட நிர்வாகம் செய்ய முடியாதவர்கள் இலங்கையின் வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் வெளிநாட்டு தூதுவர்களின் எண்ணிக்கை 63 ஆகும். இவர்களின் 42 பேர் அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டவர்கள். இதனால் இவர்கள் மூலமாக நாட்டுக்கு உரிய சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மாடு மீது மோதி காயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழந்தார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீராவிப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இவர் படுகாயமடைந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தார்.

முள்ளியவளை, தண்ணீரூற்று மேற்கைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான மனுவேல் நாகலிங்கம் (வயது - 52) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

மனைவியுடன் முல்லைத்தீவுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது இவரின் மோட்டார் சைக்கிள், நீராவிப்பிட்டி பிரதான வீதி நடுவில் படுத்துறங்கிய மாடொன்றின் மீது மோதியுள்ளது. இதன்போதே இவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்தின்போது மனைவி சிறு காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு. சிகிச்சை பெற்று நேற்று முன்தினம் வீடு திரும்பியுள்ளார்.

ஆனால், அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்விபத்து தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்கலைக்கு மாணவர்கள் 2 கட்டங்களாக இணைப்பு

(கொழும்பு)

இம்முறை பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களை 2 கட்டங்களாக அடுத்த வருடம் இணைத்துக்கொள்ளவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தோற்றியவர்களே பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் மாணவர்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் கீர்த்தி மாவெல்லகே தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டுக்கான மாணவர்கள் அடுத்த வருடம் மார்ச் மாதம் பல்கலைக் கழகங்களில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். 2013 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தெரிவாகும் மாணவர்களை அடுத்த வருடம் நவம்பர் மாதம் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் 2014 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் சர்வதேச பல்கலைக்கழகங்களின் நாட்காட்டிக்கு அமைவாக 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு; ஜனவரி முதல் பதிவில் மாற்றம்

(கொழும்பு)

வேலை வாய்ப்பு பெற்று வெளிநாடு செல்லும் இலங்கையர்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து விமான நிலையத்தில் பதிவு செய்யத் தேவையில்லை என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

தொழில் ஒப்பந்தம் குறித்து விமான நிலையத்தில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் எந்தவொரு நபரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்று நாட்டை விட்டு வெளியேற முன் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் விமான நிலையத்தில் பதிவு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

எனினும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து விமான நிலையத்திற்கு செல்வதற்கு முன்னர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

# பிள்ளைகளால் கைவிடப்பட்ட 1000 பெற்றோர்கள் முறைப்பாடு

(கொழும்பு)

பிள்ளைகளால் கைவிடப்பட்ட சுமார் 1000 பெற்றோர்கள் குறித்து சமூக சேவைகள் திணைக்களத்தின் பராமரிப்பு பிரிவிற்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இவற்றில் 200 முறைப்பாடுகளுக்கு தீர்வுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதாக திணைக்களத்தின் பணிப்பாளர் அனூஷா லொக்குகே தெரிவித்தார். தற்போதைக்கு கொழும்பு நகரில் செயற்படும் பராமரிப்பு சேவை பிரிவை எதிர்காலத்தில் மாகாண ரீதியில் நடைமுறைப்படுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் வயோதிபர்களுக்கு இலகுவாக முறைப்பாடுகளை முன்வைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். தமது பிள்ளைகளால் பெற்றோர்கள் கைவிடப்படும் பட்சத்தில் உடனடியாக அது குறித்து முறையிடுமாறு அனூஷா லொக்குகே கேட்டுக்கொண்டுள்ளார்.


# மரண அறிவித்தல்



## கந்தையா - நாகசற்பராசா

காரைநகர் வலந்தலை - மாப்பானவூரியை வசிப்பிடமாகவும், பிறப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகசற்பராசா அவர்கள் 08.12.2013 நேற்று ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான கந்தையா, இராசம்மாவின மகனும், இராசதுரை, இரத்தினேஸ்வரி ஆகியோரின் மருமகனும், காந்தேஸ்வரியின் அன்புக்கணவரும் இராசலட்சுமி, தனலட்சுமி, நாகலட்சுமி, சிந்தாமணி, நாகமணி ஆகியோரின் சகோதரரும், மோகனராசா, வரலட்சுமி, கயேந்திரன், நிமலேந்திரன் ஆகியோரின் தந்தையாரும், சுபாசினி, கிஸ்ணபவான், ஜெனசி ஆகியோரின் மாமனாரும், அபிராமி, அனுஜா, வினிதா, டிசானி ஆகியோரின் பேரப்பிள்ளையும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (09.12.2013) பிற்பகல் 3 மணிக்கு சாம்பலோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
தொ.இல. 0776249191
0773314395

வலந்தலை, மாப்பானவூரி,
காரைநகர்.

(இ)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.